REGISTERED No. M. 6165. அணா 2

58

58/4-53

பத்ஹுல் இஸ்லாம்

FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

அக்டோபர் 1953.

விஷயம்.	பக்கம்.
தரணியிலே இஸ்லாம் தனிப்பட்டவருக் குரியதல்ல (வேளாங்கண்ணி-சாந்திதாஸன்)	1
கடமையில் கண்ணியமானது (மேல்விஷாரம் எம். எ. ரஜாக் பாகூதா கமல்)	5
ஸிராஜுஸ் ஸாலிகீன்	11
பசுமை படுத்த முயல்வாயே	16
உணர்வோம் (மாஸ்டர் கமல் பாபு)	,,
மாயமாய் மறைந்த மங்கை (தொடர் கதை)	17
நல்லுபதேசம் (அய்யம்பேட்டை எஸ். அப்துர் ரஜாக் ஸாஹிப்)	25
அச்சுப் பணியாரம் (மாதர் பகுதி)	31
விகடத் துண்டுகள்	32

இஸ்லாம் ஆபீஸ் :
20, ஹைரோட், திருவல்லிக்கேணி,
மதறாஸ் 5.

3L.
Q7ண211,N24FI
N53
187024

பத்ஹூல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

வருஷ சந்தா	ரூ.	1–8–0
தனிப் பிரதி	அணா.	2

மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா ரூ. 2–0–0

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,

பத்ஹூல் இஸ்லாம்,

20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருாஸ் 5.

முஹ்யித்தீன் ஆண்டவர்கள் காரண சரித்திரம்.

இது கல்விக் கடலாகிய இமாம் அப்துல்லாஹில் ஷாபிஈ றலியல்லாஹு அன்ஹு அவர்கள், அல்குத்துபுர் றப்பானீ வல்கவுதுஸ் ஸமதானீ ஸையிதினா முஹ்யித்தீன் அப்துல்காதிரில் ஜீலானீ றலியல்லாஹு அன்ஹு அவாகளுடைய காரண சரித்திரங்களில் நின்றும், கஷ்பு கறாமத்துகளில் நின்றும் அருமையும் அற்புதமான ஹிக்காயத்துகளாக அறபியில் எழுதியிருந்த கிதாபை, தமிழில் மொழி பெயர்த்து அறிய முறையில் வெளியிடப்பட்ட பெரிய நூலாகும். கலிகோ பைண்டு செய்யப்பட்டுள்ளது.

இதன் விலை ரூ. 3

ஷை அறபுத் தமிழில் "அல்கன்ஜுல் அப்கம் பீ மனாகிபுல் கவ்துல் அஃலம்"

இதன் விலை ரூ. 8

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹூல் ஹமீது & ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

பத்ஹுல் இஸ்லாம்.

அக்டோபர்—1953.

தரணியிலே இஸ்லாம் தனிப்பட்டவருக் குரியதல்ல!

(வேளாங்கண்ணி-சாந்திதாஸன்)

வாள்முனைக்கு வடித்துக் கொட்டுவது வீர உறம் தோய்ந்த செங் குருதித்துளிகள்! பேனா முனைக்குப் பணிவது பொர்கரிய பேரறிஞர் நெஞ்சங்கள்!! என்னும் இவ்விருவகை அனுபவ அடிப்படைகளை அறியாதார் எவருமிலர். அத்தகைய காந்தமதே நிறைவாகிய எழுதுகோலை ஏந்தும் எழில் காங்கள் எவரேனும் எடுத்தியம்ப முடியாத அளவிற்கு பண்பட்ட திரன்படைத்ததெனின், அவை மிகையாகாது. சுருங்கக் கூறுமிடத்து, இப்பாருலகைப் போதிய முன்னேற்றத்தினூடே பரிபாலிக்கும் பண்பு பொருந்தியவனும், பகுத்தரிவாளனும் பணிபுரிவதில் சரிநிகர் சிறப்பினை எய்தவர்கள்தான் என்பது இன்றைய எமது இளமைத்துடிப்பின் இன்றியமையாத துணிவும்-சாதனையும்கூட, ஏன்? செங்கோல்பிடித்து எங்கும் மக்களின் அப்போதைய குறைகளை தவிர்க்கின்றான் கொலுவோச்சும் காவலன்!

எழுதுகோலினை ஏந்தி அழகிய கருத்துக் கோர்வைகளை அவையோர்கட்கு அடுக்கடுக்கான உயிர்த் துடிப்புற்ற "கவிதைப் பாக்களாக" கவர்ச்சி குன்றாது வழுத்துகின்றான் ஆற்றல் படைத்த பாவல்லன்! இத்தகைய சமநோக்கு மனப்பான்மையிலேதான் மேற்குறிப்பிட்டுள்ளவாறு அந்த இரு நபர்களையும் ஒருமை கண்ணோட்டத்திலே உதாரண உவமானம் அமைத்து இங்கு கூறியுள்ளேன்.

சிந்திக்கலாம் சரியெனப் படும்வரையில்—நிந்திக்க முடியாது நிலைத்தவறி இந்த முடிவினை தங்களது வளவாழ்விலே புலனுற்ற பெருந்தகையாளர்கள் பெரிதும் ஒப்புக்கொள்ள முற்படுவார்கள் என்றே கருதுகின்றேன். மேலும், இது நந்தமிழ் நாட்டின் அப்

பழுக்கற்ற வளர்ச்சிக்கே தசையும்-நரம்பும் போன்றதொரு பொது வுடமையான பிரச்சினையாகும், குறிப்பாக-எழிலுருவின் இரும்புப் பிடியிலே ஏறக்குறைய இன்றைக்கு பதிமூன்று நூற்றுண்டுகட்கு முன்னர் படர்ந்து வளர்ந்து தனது தூய்மைப் பாதையிலே பரிணமித் தோங்கும் பரிசுத்த இஸ்லாத்திற்கு இன்றளவும் நிரம்பியுள்ள புகழ் அனைத்தும் இங்கும் அத்தகைய அறிவுசான்ற பேனு வீரர்களும், புல வர் பெருமான்களும், கெழுநகை கலைஞர்களும், மதப்பிரச்சார மஹான் களும் தோன்றித் தோன்றி காலத்திற்கேற்ப கடமைப்பணி புரிந்தலினுல் தான் இன்று சரிதை எடுகளின் சான்றும்-அவற்றில் பொதிந்துள்ள பொன் மொழிகளின் பொறுப்புணர்ச்சி ததும்பும் கூற்றுகளும் ஓர் வெளிப்படையான விளக்கமாக மல்கி கிடக்கின்றன. ஆதலின், அந்த மரபினர்கட்கு என்றென்றும் நன்றி நவில நாம் கடமைப்பட்டுள்ளோம். மேலும், அத்தகைய அன்பர்களை இன்முகம்காட்டி, பொன்னுடைப் போர்த்தி, ஆயிரமாயிரம் ஆக்கஉணர்ச்சிக்கூட்டி, வியந்துப் பாராட்டி வர வேற்க காத்திருக்கின்றோம். எனினும், என்ன காரணத்தினுலோ, இன்று விரல்விட்டு எண்ணக்கூடிய இஸ்லாமிய எமது சகோதர இளம் எழுத்தாளர்களும், முதிர்ந்த ஒருசில மேதைகளும் பகுத்தறிவு எடுகள் பலவற்றில் இஸ்லாமிய இன ஒழுக்கத்தினை எடுத்துக் கையாள முற் படும் பொழுதெல்லாம் தாம்வரையும் கட்டுரைகளிலே "எம் தீனுல் இஸ்லாம்!" "என் நன்னய இஸ்லாம்"! "எங்கள் உயரிய இஸ்லாம்!" என்றெல்லாம் எழுத ஆரம்பித்திருப்பதை கண்கூடாய் காண்கின்றோம். இவை அவர்களின் பொதுவுடமைக் கொள்கையற்ற அறியாமையின் அசம்பாவிதப் போக்கு என்றுதான் எண்ணவேண்டியதாக இருக்கின் றது. எனெனில், இஸ்லாம் இயற்கையான ஒரு சம்பூர்ண மதம்! அவை செயற்கையின் துணைக்கொண்டு செப்பனிடப் பட்டதல்ல. எக் காலத்திற்கும்-எல்லோருக்கும் ஏற்றதொரு பொதுப்படையான இலட் சிய மதம்!! ஒரு தனிப்பட்ட குழுவினருக்கோ, ஒரு தனிப்பட்ட கொள்கையினருக்கோ, அல்லது ஒரு தனிப்பட்ட நபருக்கோ உரிய தல்லவென்று அன்றிலிருந்து இன்றுவரையில் ஒரு ஆத்மீக அடிப்படை திட்டமாக நன்குணர்ந் துள்ளோம்.

"வ அன்பிகூ மிம்மா ரஜக்னுகும்-மின் கபுலுஅன் எஃதிய அஹது குமுல் மௌத்!" "பயகூல றப்பிலவ்லா அஃகர்தனி இலா அஜலின் கரீப்-பஅசத்தக வஅகுன் மினஸ்ஸாலிஹீன்!" "பலன்யு அஃகிரல் லாஹு நப்ஸுன் இதாஜாஅ- அஜலுஹா-வல்லாஹு கபீருன் பிமா தஃமலூன்!" இத்தகைய வல்லானின் விளக்கமே அவற்றிற்கான வரை யறையாகும். எவ்வாறெனில், இவ்வகன்ற மாமல்லத்திலே மனித இனத்தை யாம் சிறப்பித்தோம். ஆறறிவினையும் அவர்களின் ஊரணிக் கருவூலமாக அமைத்தோம். உயர்ந்தோன்-தாழ்ந்தோன் என்னும் பிணக்கை அவர்களிடையே பொருத்தவில்லை. ஆண், பெண் இரு பிரி

137024

விளையாகத்தான் அவதார மெடுக்கச் செய்தோம், அவர்களது வாழ் நாளின் புனிதமான காரியாதிகள் ஒன்றையே அவர்களின் அன்புக் காணிக்கையாக பெரிதும் விழைந்தோம். குறைகளை களைவதாகவும் கூறினேம். குணவிசேஷத்தைப் பொருத்தமட்டில் துற்கிரிகைகளை தொடர்ந்து புரிந்துவிட்டு தொண்டை நெருக்கத்திலே துஞ்சி துஞ்சி-அழுது கெஞ்சினலும் கிஞ்சிற்றும் செவிமடுக்கமாட்டோம் என்றுதான் இப்பொழுதும் நயமாகவே எச்சரிக்கை விடுக்கின்றேம். மேலும், யாம் அவர்கட்கு வகுத்துவைத்த பொற்பீடம் இஸ்லாம் ஒன்றேயாகும்! அன்பீர்! அவற்றின் ஆதார அநுபந்தம்-மேற்குறிப்பிட்டுள்ள அறை கூவலின் முடிவு இவைகள்தான். சுமார் பன்னிரண்டாவது பிராயம் முதற் இஸ்லாமியத்திலே யானும் ஒரு இளம் எழுத்தாளன்-பேச்சா ளன் என்ற அடி சுவற்றிலே, நுங்களின் எதிர்கால நன்மைக்கென்ற இந்த ஒரு சிறு தவறின் உண்மையை எடுத்துக்காட்டி, பராபரனின் பயனேயே பாசறையாகத் தாங்கி வெளித்தோன்றும் நம் "பத்ஹுல் இஸ்லாம்" பத்திரிகையின் வாயிலாக இக்கட்டுரையை தீட்ட முன் வந்துள்ளேன். சீற்றமுறாது இனியேனும் சீர்த்திருத்திக் கொள்வீர் களாக.

அஸ்ஸலாமு அலைக்கும்!!!

மஜ்மூஅ முனஜாத்.

சுத்த தமிழ்

(முதல் பதிப்பு)

இந்த புஸ்தகத்தில் ஹக்கு பேரில் முனஜாத்து, யாஸை யிதிமாலை, யாகுத்பா மாலை, தலைப்பாத்திஹா, ஸலவாத்துப் பாட்டு, முத்து மணி மாலை, பக்தி ஆனந்த பாத்திமுத்து மாலை, முஹியித்தீன் முனஜாத், காஜா பந்தே நவாஸ் முனஜாத், சரஸ்வதிமாலை, காஸிம் புலவர் இன்னிசை, கலியாண வாழ்த் துப் பதங்கள் ஆகிய இவைகள் சேர்ந்திருக்கின்றன.

இதன் விலை அணு. 8
ஷை அரபுத் தமிழில் விலை ரூ. 1-4-0

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

பெரிய கஸஸுல் அன்பியா

(தமிழ்)

மூன்று பாகங்கள் சேர்ந்தது.

முதல் பாகத்தில் துவக்கம் படைத்ததினுடைய கிஸ்ஸா, ஆதம் அலைஹிஸ்ஸலாம் கிஸ்ஸா, ஷீது அலைஹிஸ்ஸலாம் கிஸ்ஸா, இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம் கிஸ்ஸா, ஹாறூத் மாறூத் மலக்குகளுடைய கிஸ்ஸாக்கள், நூஹு அலைஹிஸ்ஸலாம் கிஸ்ஸா, ஹூது அலைஹிஸ்ஸலாம் கிஸ்ஸா, ஷத்தாது கட்டிய சுவர்க்கத்தின் கிஸ்ஸா, ஸாலிஹு அலைஹிஸ்ஸலாம் கிஸ்ஸா, இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாமுடைய கிஸ்ஸா, இஸ்மாயீல் இஸ்ஹாக் அலைஹிஸ்ஸலாமுடைய கிஸ்ஸாக்கள், யஃகூப் அலைஹிஸ்ஸலாம் கிஸ்ஸா, யூஸுப் அலைஹிஸ்ஸலாமுடைய கிஸ்ஸா ஆகியவைகள் அடங்கி இருக்கின்றன.

இரண்டாம் பாகத்தில் ஐயூப் அலைஹிஸ்ஸலாமுடைய கிஸ்ஸா, துல்கிப்லி அலைஹிஸ்ஸலாமுடைய கிஸ்ஸா, ஷுஐபு அலைஹிஸ்ஸலாமுடைய கிஸ்ஸா, மூஸா அலைஹிஸ்ஸலாமுடைய கிஸ்ஸா, கிலுறு, யூஷஹ் அலைஹிஸ்ஸலாமுடைய கிஸ்ஸாக்கள், இல்யாஸ் அலைஹிஸ்ஸலாமுடைய கிஸ்ஸா, அல்எஷஹ், அஷ்மவீல் அலைஹிஸ்ஸலாமுடைய கிஸ்ஸாக்கள், தாவூது அலைஹிஸ்ஸலாமுடைய கிஸ்ஸா, ஸுலைமான் அலைஹிஸ்ஸலாமுடைய கிஸ்ஸா, யூனுஸ் அலைஹிஸ்ஸலாமுடைய கிஸ்ஸா ஆகியவைகள் அடங்கியிருக்கின்றன.

மூன்றும் பாகத்தில் ஈஸா அலைஹிஸ்ஸலாமுடைய கிஸ்ஸா, ஸக்கரியா, எஹ்யா, மரியம், அலைஹிஸ்ஸலாமுடைய கிஸ்ஸாக்கள் அடங்கி யிருக்கின்றன.

மேலே கூறிய ஒவ்வொரு கிஸ்ஸாவிலும் அநேக சிறு கிஸ்ஸாக்கள் அடங்கி யிருக்கின்றன.

இந்த புஸ்தகம் 10–அங்குல நீளம், 7–அங்குல அகலமுள்ள பெரிய அளவில் 648 பக்கங்களைக் கொண்டது, கலிகோ பைண்டு செய்யப்பட்டது. தற்போது தயாராய் இருக்கிறது.

இதன் விலை ரூபா. 9—8—0

ஷை அரபுத் தமிழில் முதற்பாகம் விலை ரூ. 6

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

கடமையில் கண்ணியமானது?

(மேல்விஷாரம் எ. எ. ரஜாக் பாக்ஷா கமல்)

கணக்கில்லா ஆலிம்களின் வாஜ் கேட்டிருக்கிறோம். பல மவுல்வி களின் பிரசங்கத்தை புகழ்ந்து மிருக்கிறோம். தற்காலத்தில் பிரசாரம் செய்து வரும் தப்லீக் ஜமாஅத்தையும் பார்க்கிறோம். யார் வந்து உபதேசம் செய்தாலும், குறிப்பாக முக்கியமாக, திடமாக, தீவிரமாக தொழுகையையே கடைப்பிடிக்க கூறுவதைக் காண்கிறோம். எந்த ஒரு காரியமும் கண்ணியமற்றதாக இருந்தால் அதை மானில மனிதர்கள் யாவரும் இவ்வளவு பெருமையோடும், புகழ்ச்சியோடும், உன்னத மாகவும் பிரசாரம் செய்ய மாட்டார்கள். ஒவ்வொரு பிரசங்கத்திலும் தொழுகையின் உபதேசம் கேட்டு நாம் அதை அலட்சியமாக நினைத்து நிருகரித்து விடுகிறோம். ஆண்டவனால் விதிக்கப்பட்ட கடமைகள் ஐந்தில் 'கண்ணியமானது எது?' என்று ஆராய்ச்சி செய்ய நமக்கு அறிவிருந்தும் ஆராய்ந்து பார்ப்பதில்லை. தென்றல் வீசும் தேனுள்ள தோட்டத்தை தேடிச் செல்லும் ஒரு தீரசாலி, தெருவில் சென்ற ஒரு தாசியின் மோகத்தால் தீ நிறம்பியுள்ள தேள்கள் வசிக்கும் தோப்புக்குள் நுழைந்தது போல, நான்கு நாட்கள் வாழ்க்கையில் நாயனை மறந்து, அவன் கட்டளைகள் மீது கவனம் செலுத்தாமல் காலத்தை வீணில் போக்கி, கொடூர செயல்கள் புரிந்து, சுவர்க்கத்தின் வழியே போக வேண்டிய நாம் நரகத்தின் வழியே போய்க் கொண்டிருக்கிறோம். நாளை 'மஹஷரி'ல் முதல் கேள்வி தொழுகையுடையதாகவே இருக்கு மென் பதை நாம் அறிந்திருந்தும் தொழுகுவதில்லை. முஸ்லிம்களுக்கு 'மெஃறாஜ்' தொழுகைதா னென்பதை காதில் கேட்கிறோமே தவிர அதை மனதில் பதிய வைத்து தொழுகுவதில்லை. தொழுகை ஆண்ட வனுக்கு எவ்வளவு பிரியமுள்ள தென்று, கடவுள் கட்டளை என்னும் தராசில் ஐந்து கடமைகளையும் நாம் நிறுத்து பார்ப்போமேயானால், தொழுகையின் அருமையும் பெருமையும் பிறர் சொல்லாமலே புரிந்து கொள்ளலாம். அழிவில்லா இஸ்லாத்திற்கு ஆண்டவனால் விதிக்கப் பட்ட அடிப்படை கடமைகள் ஐந்து; கலிமா, தொழுகை, நோன்பு, ஜக்காத், ஹஜ் என்றதாகும். இந்த ஐந்து கடமைகளையும் தனி தனி யாக நிறுத்து பார்த்தால், இக்கடமைகளில் கண்ணியமானது எது? என்று நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

முதலில் கலிமாவின் மீது கவனம் செலுத்தினால் மனிதன் தன் வயதில் ஒரு முறை திருகலிமாவை அர்த்த மறிந்து நாவால் ஓதுவதோடு சந்தேகமற்ற உண்மை அகீதாவை மனதில் உறுதி படுத்த வேண்டும். இவ்விதமாக நாவால் ஓதியும் மனதில் அகீதாவும் கொண்டு விட்டால்

அவன் முஸ்லிமாகி விடுகிருன். இவ்வளவு தான் முதல் கடமையின் கண்ணியம்.

அதன் பின் மூன்ருவது கடமையாகிய முப்பது நோன்பின் மீது சிந்தனையை செலுத்திஞல், இது மானில முஸ்லிம்கள் யாவர் மீதும் பர்லாக்கபட்ட தென்ருலும், நோன்பு வைக்க சக்தி யற்ற நோயாளிக ளுக்கும், வயோதிகர்களுக்கும் இதர காரணங்கள் உள்ளவர்களுக்கும் மன்னிக்கப்படுகிறது. அதிலும், ஒருவன் நோன்பு வைக்க சக்தியிருந் தும் வைக்காமல் நோன்பு காலத்தில் முப்பது நாளும் அறுபது மிஸ் கீன்களுக்கு இரண்டு வேளை உணவு அளித்தானே யாஞல், நோன்பு வைப்பதிலுள்ள ஸவாபு அவனுக்கு கிடைக்கா விட்டாலும், நோன்பின் கடமை மட்டும் நிறைவேற்றியதாக கண்டிப்பாக கருதப்படும். இது நோன்பின் கண்ணியம்.

இதன் பின் நாயனுடைய நான்காவது ஐந்தாவது கட்டளைகளாகிய ஜகாத், ஹஜ். இதுகளை எடுத்து பார்த்தால், இந்த இரண்டு கடமை களும் எல்லாம் முஸ்லிம்கள் மீது பர்லாக்க படவில்லை. குறிப்பிட்ட பணக்காரர்கள் மீதே இதுகள் பர்லாக்கப்பட்டிருக்கிறது. அதுவும், ஜகாத் நாற்பதில் ஒரு பங்கும், ஹஜ் தன் வயதில் ஒரு முறையும் செய்ய வேண்டும். அதிலும், ஹஜ் பர்லாக்கப்பட்ட ஒரு பணக்காரன், தான் பிரயாணம் செய்யாமல், மக்காவுக்கு போய்வர ஆகும் செலவுகளை கொடுத்து வேருெரு மனிதனை அனுப்பி விட்டாலும் அப்பணக்கார னுடைய கடமை நிறைவேறிடும். இது தான் சகாத், ஹஜ் உடைய கண்ணியங்கள்.

இறைவனுடைய இரண்டாவது கட்டளையாகிய தொழுகையின் மீது நம் சிந்தனையை திருப்பி பார்த்தால் தொழுகை, கறையில்லா கண் ணிய கடலாக காட்சி தரும். பெண்களுக்குரிய மாத விடாய் ஒன்றை தவிர, மற்ற எந்த காரணத்தை முன்னிட்டும் தொழுகைக்கு மன்னிப்பு கிடையாது. பிரயாணத்தின் போதும், நான்கு ரகாயத்திற்கு இரண்டு ரகாயத் தொழுதே தீர வேண்டும். முஸ்லிமாக பிறந்த ஆண் பெண் இரு பாலர்கள் மீதும், அவர்கள் பருவ மடைந்த வயதிலிருந்து மரண மாகும் வரை தொழுகை பர்லாக்கப் பட்டிருக்கிறது. இடையில் எக் காரணத்தைக் கொண்டும் தொழுகையை விட உரிமை கிடையாது. ஒரு வேளை தொழுகை விட்டு விட்டால் நபி நாயகம் வாக்குபடி என்பதி ஞயிறம் வருஷம் நரகத்தில் வாசம் செய்ய நேறிடும். அலங்கார ஆடை கள் அணிந்து அரசாட்சி புரியும் அரசனுக இருந்தாலும் சரி, அனுதினம் பிச்சை எடுத்தே பிழைக்கக் கூடிய ஆண்டியாக இருந்தாலும் சரி, கட்டுமஸ்தான திரேகமுள்ள காண்டிபனுக இருந்தாலும் சரி, கோல் ஊன்றி நடக்கும் தள்ளாக் கிழவனுக இருந்தாலும் சரி, நாற்பது பேர் களுடன் தனியாக போர் புரிந்து வெற்றி பெறும் வீரனுக இருந்தாலும்

சரி, நோயற்ற வாழ்வு இன்னதென்று நிமிஷமும் அறியாத நோயாளி யாக இருந்தாலும் சரி, ஒரு நாளைக்கு விதிக்கப்பட்ட ஐந்து வேளை தொழுகையை அவன் தொழுதே தீர வேண்டும். நின்று தொழுக சக்தியற்றவன் உட்கார்ந்தும், உட்கார்ந்து தொழுக முடியாதவன் படுத்தும், படுத்து தொழுக பல மில்லாதவன் சைகையிலும், சைகை யால் தொழுகவும் சக்தி யற்றவன் மனதிலே தொழுக வேண்டியது கடமையாகும். சக்ருத் என்னும் இயமனிடம் போர் புரியும் போதும் தொழுகை நேரம் வந்து விட்டால் மேல் சொல்லிய படி அவன் மன திலே யாகிலும் தொழுதுதீர வேண்டும். வேதனை காரணமாக அந் நேரத்தில் அவன் தன் மனதிலே தொழுக மறுத்தானேயானால், ஒரு வேளை தொழுகை விட்டதற்கு தண்டனையாக எண்பது ஆயிரம் வருஷம் அவன் நரகத்தில் வேக வேண்டும். அறிவில் சிறந்த முஸ்லிம்களாகிய நாம், இப்போது ஆராய்ந்து பார்க்க வேண்டியது என்ன வென்றால், தொழுகை ஆண்டவனுக்கு எவ்வளவு பிரியமுள்ளதாக இருந்தால், எந்த கஷ்டத்திலும் தன் இஷ்டப்படி அதை தவறிவிடக் கூடாதென்று திட்டவட்டமான சட்டத்தை நம்மீது விட்டிருப்பா னென்பதை ஒவ் வொரு முஸ்லிம், ஆண், பெண்ணும் ஆண்டவனுடைய கடமைகளை ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டியது அவசியம்.

இரத்த ஆறு ஓடும் போர்களத்திலும், இறைவன் தொழுகையை கடைப்பிடிக்கவே கூறுகிறான். போர்களத்தில் தொழுகை நேரம் வந்து விட்டால் இரண்டு கூட்டங்களாக பிரிந்து ஒரு கூட்டம் தொழுகும் போது மற்றொரு கூட்டம் தொழுதுக் கொள்பவர்களை பாதுகாத்து நிற்கவேண்டும். அவர்கள் தொழுது முடிந்ததும், பாது காத்து நின்றவர் தொழுகவேண்டும். அப்போது தொழுது கொண் டவர்கள் அவர்களை பாதுகாக்கவேண்டும். இப்படியாக, அம்பு மழை பொழியும் அந்நேரத்திலும் தொழுகையைவிட்டு விட ஆண் டவன் சொல்லவில்லை.

குழந்தைகள் பிறந்த உடன் முதலில், பாங்கு, காமத் சொல்லி அவைகளை தொழுகைக்காகவே அழைக்கிறார்கள். இதுமட்டுமல்ல. ஒரு முஸ்லிம் மரணமாகி விட்டாலும், தொழுகையுடனே அவனை அடக்கம் செய்கிறார்கள். இதனால், ஒரு முஸ்லிமுடைய பிறப்பு இறப்பு தொழுகையினாலேயே ஆகிறதென்று நன்றாக புலப்படுகிறது. அத்துடன், “இன்ஸானையும் ஜின்னையும் உற்பத்தியாக்கியது தன் னுடைய வணக்கத்திற்காகவே” என்று ஆண்டவன் திருகுர்ஆனில் கூறிய உண்மை வெளியாகிறது. நாம் எந்த கஷ்டத்திலிருந்தும் விடுதலை பெறவேண்டு மானால் தொழுகையைகடைப்பிடிக்க வேண்டும். தொழுகையின் பொருட்டால் அநேகருடைய இன்னல்கள் தீர்ந்திருப் பதை சரித்திரவாயிலாக அறிந்து இருக்கிறோம். தொழுகை துயரங் களை தீர்க்கு மென்பதற்கு இதோ அத்தாட்சிகள்.

ஹஜ்ரத் தாஹிர்பின் ஷுஅஃப் பஸ்ரீ (ரஹ்) அவர்கள் சொல்கிறார்:— ஒரு சமயம் காஜாஹஸன் பஸ்ரீ (ரஹ்) அவர்களுடன் பிரயாணம் செய்து கொண்டிருந்தோம். வழியில் நமக்கு தண்ணீர் தாகம் அதிகமானது. அங்கொருகிணறு காணப்பட்டது. ஆனால் கயிறு சொம்பு எதுவுமில்லாததால் தாகத்தை தணிக்கமுடியாமலிருந்தது. அப்போது, காஜா (ரஹ்) அவர்கள் இரண்டு ரகாயத் தொழுது நம் தாகத்தைத் தீர்க்கும்படி நாயனை பிரார்த்தித்தார்கள். அவருடைய பிரார்த்தனை இன்னும் முடியவில்லை. இதற்குள் ஆழத்திலிருந்த தண்ணீர் கிணற்றின் உறையளவில் வந்துவிட்டது. நாம் எல்லோரும் தேவையானவரையில் தாகத்தைத் தீர்த்துக் கொண்டோம்.

ஹஜ்ரத் எஹ்யா பின்யாகூப் (ரஹ்) அவர்கள் சொல்கிறார்:- ஒரு நாள் சில நண்பர்களுடன் படகில் போய்க் கொண்டிருந்தோம். படகு மத்தியில் சென்றதும் புயல் வீச ஆரம்பித்தது. புயல் வீசும் நோக்கத்தைப் பார்த்தால் சற்று நேரத்தில் படகு கவிழ்ந்து விடும் போல் காணப்பட்டது. ஆகவே, நான் உடனே தொழுகையை ஆரம்பித்தேன். சலாம் கொடுத்தஉடன் பார்த்தால் ஒரு ஹப்ஷி நீந்திக் கொண்டு நம்மிடம் வந்து என்னை கறையில் கொண்டு போய் சேர்த்தான். இதேபோல் நம் எல்லோரையும் கறை சேர்த்து காப்பாற்றினான். நாம் அவனுக்கு சன்மானம் அளித்தோம். ஆனால் அதை அவன் வாங்க மறுத்ததோடு மாயமாகமறைந்தும் விட்டான். இவ்விதமான அம்சங்கள் அவுலியாக்களுடைய வாழ்க்கையில் மட்டும் ஏற்படவில்லை. தற்கால முஸ்லிம்களுடைய வாழ்க்கையிலும் ஏற்பட்டுள்ளது.

உதாரணமாக, தற்கால மனிதரான மாஸ்டர்பர்கத் அலி என்பவர் மேல் நாட்டு கொள்கையில் மோகம் பிடித்தவர். பெயருக்குதான் அவர் முஸ்லிமாக இருந்தாரே யன்றி செயலில் குபிராகவே இருந்து வந்தார். அவர் வீட்டில் வறுமை விளையாடிக் கொண்டும் சிறுமை சிரித்துக் கொண்டும், தரித்திரம் தாண்டவமாடிக் கொண்டுமிருந்தன. பர்கத் அலியின் பெண்ஜாதி தன்சகி ஒருவளை சந்திக்க சென்றிருந்தாள். இவளுடைய வாடிய முகத்தையும் கிழிந்த ஆடைகளையும் கண்டு, இவள் சிறுமை லோகத்தில் சஞ்சாரம் செய்கிறாள் என்று சொல்லாமலே சகி தெரிந்து கொண்டாள். வாஞ்சை யோடு விஷயத்தை கேட்டாள் சகி. பர்க்கத் அலியின் மனைவி விபரத்தைச் சொன்னாள். "விடிய காலையிலிருந்து வேலைக்கு தினம் தவறாமல் அலைகிறோம், வேலைகிடைக்க வில்லை. நம்கஷ்ட ஜீவனத்திற்கு கண்ணீர் தான் சாந்தி அளிக்கிறது." இவள் சோகக் கதையைக் கேட்ட சகி கண்ணீர் விட்டு சொல்லுகிறாள்: "அன்புள்ள சகியே! கலங்காதே. நான் கடவுள் சாட்சியாக சொல்லுகிறேன். நீயும் உன்புருஷனும், ரிஜ்ஜகை கொடுக்க கூடிய ரஜ்ஜாகாகிய அந்த ஆண்டவனை அனுதினமும் ஐந்து வேளை வணங்குவதோடு 'தஹஜ்ஜுத்'

தொழுகையும் தொழுது வந்தால், உங்கள் துயரங்க ளெல்லாம் தவுடு பொடியாகி பறந்து விடும். என்வார்த்தையில் உனக்கு சந்தேகம் இருக்கு மானல், பரிட்சையாக பாவித்து, ரிஜ்ஜகை நாடி அந்த ரஜ்ஜாக் என்ற ஆண்டவனுடைய சன்னிதானத்தில் உன் நெற்றியை சாய்த்துபார். சொற்ப நாளில் சிறுமை சிற்றரசன் மறைந்து, செல்வரசன் வந்து சிறிக்கிருன்'' இவ்விதமாக அச்சகி இவளுக்கு உபதேசம் புரிந்தாள். அவளும் அதை தன்புருஷனுகிய பார்கத் அலி இடம் பகர்ந்தாள். அவன் அதை மறுத்தான். மனைவி மீண்டும் மீண்டும் வற்புறுத்தவே அதையும் பார்க்கலாமென்று, ஐங்கால தொழுகையுடன் தஹஜ்ஜுத்தொழுகையும் தொழுது வந்தான். கடவுள் கிருபை! தொழுகையின் பொருட்டு!! பிரார்த்தனையின் பலன்!!! ஒரு வாரம் பூர்த்தியாகுவதற்குள் ரேடியோஸ்டேஷனி லிருந்து அழைப்பு வந்தது. பர்கத் அலிக்கு அவ்விடம் டைரக்டர் உத்தியோகமும் கிடைத்து விட்டது. இப்போது அவர் வீட்டில் செல்வம், சந்தோஷம் மழலையின் மொழி எல்லாம் ஒன்ருக சேர்ந்து குதுாகலிக்க செய்கிறது.

இவ்விதமான உண்மை ஆச்சரிய சம்பவங்களை எழுதுபவர் சலிக்காமல் எழுதினுலும் படிப்பவர்களுக்கு படிக்க போதிய அவகாச மிருக்காது. அதிலும் பானை சோற்றுக்கு ஒரு சோறுபதம் என்பது போல் அறிவுள்ள முஸ்லிம் களுக்கு அதிகமாக சொல்ல வேண்டிய அவசிய மில்லை. எனவே இதுவரை சொல்லிவந்த விஷயங்களைக் கொண்டே தொழுகை எத்தகையதென்றும், கடவுளின் கட்டளையான கடமையில் கண்ணியமானது எது? என்று சிந்தனை நிறைந்த சிதே விகள் நன்கு உணர்ந்து கொள்வதோடு ஒரு வேளை தொழுகையும் தவற விடமாட்டார்கள் என்பது திண்ணம்.

புதிய மூன்றும் பதிப்பு

ஹஸ்ரத் நாகூர் மீரான் ஸாஹிபு

ஆண்டவர்கள் காரண சரித்திரம்

இது ஹஸரத் ஸெய்யிது அப்துல் காதிர் ஷாஹுல் ஹமீது மீருன் ஸாஹிபு ஆண்டவர்களின் ஜீவியமும், அவர் களின் அற்புதமாகிய கருமத்து களும் ஒருங்கே நிறைந்தது. இது நேர்த்தியான காகிதத்தில் அச்சிடப் பட்டு அழகான பைண்டும் செய்யப்பட்டது. விலை ரூ. 2–4–0

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

அரை விலை

(31—10—53 தேதி வரை)

ஹனபி மதுஹபுக்குரிய பர்லு, ஷர்து முதலியவைகளை மதரஸாக்களில் சிறு பிள்ளைகளுக்கு முதன் முதலாக கற்பித்துக் கொடுக்கக் கூடிய அரபுத் தமிழ் கிதாபு

துஹ்பதுல் அத்பால்

லிதுஹ்பல ஸுப்ததல் அஃமால்

தற்போது போட்டோ பிளாக் அச்சில் அச்சிடப்பட்டு மூன்று கலர்களையுடைய டைடிலுடன் வெளி வந்து விட்டது.

இதன் ஒன்றின் விலை அணா. 8

சரக்கு இருக்கும் வரை 31—10—53 தேதி வரை ஒரே நேரத்தில் 100 கிதாபுக்கு குறைவில்லாமல் வாங்குபவர்களுக்கு அரை விலையில் அதாவது ரூபாய் 25-க்கு 100 கிதாபு வீதம் கொடுக்கப்படும்.

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

ஸிராஜுஸ் ஸாலிகீன்.

[கஸ்ஸாலி இமாம் (றஹ்) அவர்க ளுடையது]
தமிழ் மொழி பெயர்ப்பு.

வினு:—நம்முடைய காலத்தில் (பண்டை காலத்தில்) பாதுஷாக்கள் கொடுத்து வரும்படியான உபகாரச் சம்பளங்களை வாங்குவதைப் பற்றிய அனுமதி யாது?

விடை:—இதைப்பற்றி உலமாக்களுக்கிடையே அபிப்பிராய பேதம் உண்டு. எந்த வஸ்துவைப் பற்றி அதுஉங்களுக்கு ஹறாம் இல்லை என்று நிச்சயம் ஏற்படுகிறதோ அதை அடைந்து கொள்ளுங்கள். ஏனெனில் அது உங்களுக்கு ஜாயிஸ் ஆகும் என்பது ஒரு சமுகத்தோரின் அபிப்பிராயம்.

அவ்வாறே, எந்த வஸ்து ஹலால் என்ற நிச்சயம் உண்டாகிறதோ அதை வாங்கிக் கொள்வது ஹலால் என்றும் சில அறிவாளர் அபிப்பிராயப் படுகிறுர்கள்.

நம் காலத்திய பாதுஷாக்களுக்கிடை பெரும்பாலோரின் பொருள் ஹறாமேயாகும். ஹலாலான வஸ்து அவர்கள் கையில் அரிதாக எட்டக் கூடும். அல்லது அவ்வாறு இல்லாதிருக்கும். பாதுஷாக்களுடைய நன்கொடைகளும், உபகாரச் சம்பளங்களும் முறையே ஹறாம் என ஊர்ஜிதப் படாத வரையில், ஒவ்வொரு ஏழையும் செல்வந்தனும் அவைகளை பெற்றுக் கொள்வது ஹலால் ஆகும் என்று அறிவாளர் அபிப்பிராயப் படுகிறுர்கள்.

ஸ்கந்தரியா அரசனுகிய மகூகஸ் ஹஸ்ரத் (ஸல்) அவர்களுக்கு காணிக்கை சமர்ப்பித்தபோது அதை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள், என்று சொல்லப் பட்டிருக்கிறது.

வினு:—ஹலாலான சொத்தை சம்பாதிப்பதற்கான ஷாத்து யாது?

விடை:—இதற்குரிய ஷாத்துகள் இரண்டு. (1) ஹாலத் (நிலைமை)

(2) இராதா (நாட்டம்)

(1) (நிலைமை) ஒருவன் கொடிய தரித்திர தசையிலா யிருக்கிறுன் இந்நிலைமையில் அவன் ஹலாலான ஜீவனத்தை மேற்கொள்ளாவிட்டால் வணக்க சம்பந்தமாயுள்ள பரது, சுன்னத், நபில் யாவும் தடைபட்டுப் போகும் போலா யிருக்கிறது. இச்சமயத்தில், ஹலாலான சம்பாத்தியம் பரது, சுன்னத், நபில் முபாஹ் (தகுதியான காரியம்) ஆகியவற்றைவிட

மேலாகும், எப்படியென்றால் மனிதன் தன் நிலைமையின்கீழ் சக்தியற்றவனாக இருக்கும்பொழுது 'முபாஹ்' வை விட்டு விடுவதும் மேன்மைகளைச் சாரும்.

(2) (நாட்டம்) பொருள் சம்பாதிப்பதின் மூலம் ஆண்டவன் வணக்கத்தில் அதனால் வலிமை ஏற்பட வேண்டும். அதாவதென்ன? "நான் ஆண்டவன் வணக்கத்தில் ஈடுபடாமல் இருந்திருந்தால் இந்த பொருளை அடைந்திருக்க மாட்டேன்" என்று மனதில் நிய்யத்து செய்து கொள்ள வேண்டும். இந்த ஷரத்துகளின்கீழ் சம்பாதித்த பொருள் முற்றிலும் நன்மை நலன்களைக் கொண்டதாகும். இல்லையேல் அப்பொருள் கைராத் (தருமம்) திற்கும் உரியதாகாது.

வினா:—அல்லாவிடத்தில் அச்சங் கொள்ளல், நம்பிக்கை வைத்தல் இவ்விரண்டின் உண்மை என்ன? அதன் கட்டளை யாது?

விடை:—அல்லாவிடத்தில் அச்சங் கொள்ளல், நம்பிக்கை வைத்தல் இவை இரண்டும் உள்ளத்தைச் சார்ந்தவை எனப்படும்.

அதாவது அச்சம் என்பது உள்ளத்தில் ஏற்படும்படியானதோர் நடுக்கம். அது அடியானுடைய உள்ளத்தில், அவன் யாதொரு தகாத காரியத்தை செய்துவிட்டு அதைக்குறித்து சிந்திக்கையில் உண்டாகக் கூடியது. இது 4 வகைப்படும்:-

(1) கியாமத் நாளில் அநேகர், நீதி நியாயத்துறையில் தங்கள் உரிமை பாத்தியங்களைக் கோருவர். அதைப்பற்றி நினைத்து ஒருவன் அவ்வாறு கோரத்தக்க வழியில் தானும் தன் பாவங்களை ஞாபகத்தில் கொண்டு வருவது.

(2) அல்லாஹு தஆலா கியாமத் நாளில் கொடுக்கும் தண்டனையை சகிக்க தன்னில் சக்தி இல்லையே என்று நினைப்பது.

(3) அடியானுடைய 'நப்ஸ்' பலஹீனமுள்ள தாகையால் அதை சகிக்கமுடியாது.

(4) அல்லாஹ் தன் அடியானை எவ்வளவு கொடுமையாய் நடத்தவும் தத்துவம் வாய்ந்தவன், ஆகியவற்றையும் நினைப்பது.

நம்பிக்கை:—இது மனதை உற்சாகப் படுத்தி வைப்பதாகும். அல்லாவுடைய கிருபையால் சுகம் பெறுவோம். அவன் கிருபை அளவிறந்தது, என்று நினைத்தல்

இதுவும் உள்ளத்தை சார்ந்தது. சுகம் வாய்ப்பது அல்லா உடைய அதிகார பொறுப்பில் உள்ள விஷயமாதலால் அடியானுடைய அதிகாரத்திற்குட்பட்டதல்ல.

அல்லா உடைய கிருபையும் அவனுடைய அருளும் அளவு கடந்தவை என்ற நம்பிக்கை வைத்தலே அவன் சக்திக்குட்பட்டது.

நம்பிக்கை யின்மை :—இதானது அல்லா உடைய கிருபை அற்றுப் போனதாக யூகிப்பதும் அவன் கிருபையை தன் உள்ளத்தி னின்றும் அப்புறப்படுத்தி விடுவதும். இது முற்றிலும் பாவமான காரியம். மேலும் அச்சத்தைப் போலவே நம்பிக்கையும் 4 வகைப்படும்.

1. அல்லாவின் ஏற்கனவே யுள்ள பாக்கியங்களைக் குறித்து நினைப்பது. ஏனெனில் அவன் ஒருவருடைய சிபார்சும், உரிமை பாத்திய முமன்றியே அவற்றை நமக்கு அருள் புரிந்தான், என்பதை நினைப்பது

2. அல்லா நலவான காரியங்களுக்காக நிர்ணயத்துள்ள நன்மை களையும் அவற்றிற்காக அவன் செய்துள்ள வாக்குறுதிகளையும், அடியான், அல்லாஹ் அருளைக் கொண்டு கருமத்து (மகிமை) உயர்வு அடைகிறான் என்பதையும், ஞாபகத்தில் கொண்டு வருவது.

3. அல்லா அடியானுக்கு இம்மையிலும் மறுமையிலும் அவன் கேட்காமலும், அவனது யாதொரு உரிமை யன்றியும் தந்தருளிய எண்ணிறந்த காருண்யங்களைக் குறித்து நினைப்பது.

4. அல்லா உடைய தயாள சிந்தையானது அவனுடைய கொடுங் கோன்மையைக் காட்டிலும் அதிகரித்துள்ளது என்று எண்ணுவது.

“என் கிருபை என் கோபத் தன்மையைவிட பெரிது” (திருக் குர்ஆன்)

இவ்விதமான இரண்டு விஷயங்களையும் எச்சமயத்திலும் ஞாபகத் தில் வைத்து வந்தால் உங்களுக்குரிய ஸ்தானம் (அச்சம் நம்பிக்கைக் கொண்டுள்ளது) அடையப் பெற்று விடும். அல்லா நல்லெண்ணத்தை தந்தருள்பவன். (ஹதீதெகுத்ஸீ)

வினா :—அடியான் அச்சத்தின் பாதையைப் பின்பற்றுவதா அல்லது நம்பிக்கைக்குரிய பாதையில் நடப்பதா ?

விடை :—இந்த இரண்டும் ஒருங்கே சம்பந்தப்பட்ட பாதையில் ஒழுக வேண்டும். எந்ததோர் அடியான் நம்பிக்கைக்கு மாத்திரம் ஆளா யிருக்கிறானோ அவன் முர்ஜியா கோஷ்டியையும், அச்சத்திற்கு மட்டும் ஆளா யிருப்பவன் காரிஜி கோஷ்டியையும் சேர்ந்தவன் ஆவான் என்பதாக சொல்லப்பட்டிருக்கிறது.

இதன் தாத்பரியமாவது அச்சம் நம்பிக்கை இவ்விரண்டும் கலந்த வழியில் ஒழுக வேண்டும். சுன்னத் ஜமாஅத்தார் பாதை இதுவே யாகும்.

வினு :—எந்த நிலைமையில் அச்சம், நம்பிக்கை இவ்விரண்டும் ஒன்றைவிட மற்றொன்று மேலாகும் என்று சொல்வது, இப்படிச் சொல்வது கூடுமா ?

விடை :—அடியான் பூரண சுகவாசியா யிருந்தால் 'அச்சத்தை' அவன் மேற்கொள்ள வேண்டும். இச்சந்தர்ப்பத்தில் அச்சமே மேலாகும்.

அவன் பலஹீனமுள்ளவனுகவோ அல்லது நோயாளியாகவோ அல்லது ஸக்ராத் (உயிர் துறக்கும் தருவாய்) நிலைமையிலோ இருந்து வருவானுகில் நம்பிக்கைக் கொள்வதே மேலாகும். அறிவாளர் இவ்வாறே சொல்லுகிறுர்கள்.

மேலும் அவர்கள் சொல்வது அல்லா உடைய கட்டளையை அனுசரித்தேயாகும்.

அதாவது :—"எந்த மனங்கள் என் அச்சத்தால் உடைந்துபோயிருக்கின்றனவோ நான் அவற்றிற்கு சமீபத்தி லிருக்கிறேன். ஆகையால், ஸக்ராத் என்று சொல்லும் படியான மரணத்தறுவாயில் "உம்மீது" என்கிற நம்பிக்கையே அதிக மிருத்தல் வேண்டும். ஏனெனில் சரீர சௌக்கியத்தின் போது அடியானுல் நேர்ந்த பாவங்களின் காரணமாக மன உடைப்பு நேரிடுதல் அவசியம்."

வினு:—அல்லாவிடத்தில் நன்நம்பிக்கை வைத்தல் சம்பந்தமாக அநேக ரிவாயத்துகள் வந்திருக்கின்றனவா ?

விடை:—வந்திருக்கின்றன. அல்லாவுடைய கட்டளையை மீறி நடக்கலாகாது. அவன் வேதனைகளுக்கு பயப்பட வேண்டும், அவன் வணக்கத்தில் சிரத்தைக்கொள்ளல் வேண்டும்.

இதில் ஒரேயொரு பிரதான ரகசிய நுட்பம் உண்டு. அநேகர் அதை அறிவதில் தவறிப்போகிறுர்கள் அதாவது அதுவே நம்பிக்கைக்கும் தமன்னுவுக்கும் ஆவலுக்கும் இடையில் இருக்கப்பட்ட நுட்பமான வித்தியாசம்.

திருஷ்டாந்தமாக, ஒருவன் விவசாயத்தில் பாடுபடுகிறுன். அதன் மூலம் தனக்கு நூறு மணங்கு தானியம் கிடைத்து விடுமென நம்பிக்கை வைத்துள்ளான். அவனது இந்த நம்பிக்கையில் ஆவலும் சம்பந்தப்பட்டிருக்கிறது.

மற்ெருரு விவசாயியை கவனிப்போம், விவசாயத்தில் அவனுக்கு சிரத்தை இல்லை. அசட்டையாக இருந்து வருகிறுன். அறுவடை சமயத்திலோ தனக்கும் 100 மணங்கு தானியம் கிடைக்கும் என்று நம்பிக்கைவைக்கிறுன். அவன் ஆவல் வீணுனது.

அதேபோல், அடியான் ஆண்டவன் வணக்கத்தில் முயற்சித்து பாவங்களை விட்டும் ஒதுங்கியிருக்கிறான். இந்நிலைமையில் அவன் தன்னுடைய சொற்ப வணக்கத்தை ஆண்டவன் ஏற்று, குறைவை மன்னித்து தனக்கு பெரும் நன்மையை தந்தருள்வான், என்று கருது வதில் ஆவலும், நம்பிக்கையும் ஒருங்கே சேர்ந்திருக்கின்றன. ஆனால் மற்றொருவன் இதற்குமாறாக நடந்து "அல்லா தனக்கு சுவர்க்கத்தை தருவான். நரகத்தைவிட்டும் காப்பான்" என்று ஆவல் கொண்டிருப் பதில் கிஞ்சித்தும் பிரயோசனமில்லை. அவன் தன் மூடத்தனத்தால் அத்தகைய ஆதரவு வைக்கிறான். அது அவனது தவறுதலும் வழிதடு மாற்றமுமாகும்.

வினா:—ரியாகாரி (வெளிப்படையாக காட்டுதல்) இக்லாஸ் (உண் மையான மனச்சுத்தி) இவற்றின் உண்மையாது? அவற்றிற்குரிய கட் டளை என்ன? அவற்றின் ஆமால் (கிரியாம்சைகள்)களினால் விளையும் பலன் யாது?

விடை:—அறிவாளர்களுக்கிடை இக்லாஸ் இருவகைப்படும். (1) இக்லாஸ், அனுஷ்டானத்தைக் கொண்டது. (2) வது இக்லாஸ் பிரதிபலனைப் பெருவதைக் கொண்டது.

அனுஷ்டான இக்லாஸில் ஆண்டவன் சந்நிதானத்தை அடைய வேண்டும் என்ற நாட்டம் உண்டு. அந்த நாட்டத்தில் அவன் கட்ட ளைக்கு மகிமையளித்து, அவன் அழைப்பை ஒப்புக்கொள்ள வேண்டும். உண்மை பக்தி வைத்தலே இதற்குக் காரணமாகும். இதுவே அனுஷ் டான இக்லாஸ் எனப்படும்.

(2) பிரதிபலனைக் கொண்ட இக்லாஸ் என்பதன் பொருள் நல்ல அமுல்களைச்செய்து மறுமைக்குரிய பலாபலன்களைப் பெறுவதற்கு எதிர்ப்பார்த்திருப்பது. இதைப்பற்றி நபிபெருமான் (ஸல்) அவர்கள் சமுகத்தில் வினவப்பட்டபோது "என் பரிபாலனாகிய அல்லாஹுத ஆலா அரும்பெரும் கண்ணியமும் கம்பீரமுள்ளவன் என்று சொல் லும்" என்பதாக வினவியவருக்கு விடை பகர்ந்தார்கள்.

அவன்மீது நேர்மையான முறையில் தரிபட்டிருக்க வேண்டும் என்றும் பெருமானவர்கள் மொழிந்தருளியதற் கிணங்கவே, அடியான் துர்ஆசைக்கும் தன் நப்ஸிற்கும் இடந்தரலாகாது, தன் ஏகசிருஷ்டி கர்த்தா வையே வணங்கி அவன்பேரிலேயே உறுதிவைக்க வேண்டும். அல்லா ஒருவனைத்தவிர இதர ஒவ்வொரு வஸ்துவின் சம்பந்தத்தையும் முறித்துவிட வேண்டும். அப்படிச்செய்யும் புனித செயலின் பெயரே உண்மை இக்லாஸ்; அதுவே நல்ல பலனை அளிக்கத்தக்கது.

பசுமை படுத்த முயல்வாயே !

எஸ். எஸ். அலாவுத்தீன் (கோழிஞ்சம்பாரை)

பாயும் நதியே நீ சொல்வாய் பாரில் நிகழும் பாவங்களை
தாயும் சேயும் வேறுகத் தரணியில் வாழ்வதை நீ யறிவாய்
சலாம் சொல்லிடும் சோதரனை சடுதியில் விரட்டும் காலமிது
துலாசு நிறையில் பார்த்தாலும் துயரின் அளவு மிக அதிகம்

மார்க்கத்தின் உண்மைக் கொள்கையினை மக்கள் இன்னும் உணர்ந்ததில்லை
தர்க்கம்பேசக் கற்றுக்கொண்டார் தாடி வளர்த்தலை வெறுக்கிறார்
இறைவன் இல்லை என்குறார் இனிமேல் உலகின் நாதன் யார்?
துறைமுகமில்லாக் கடற்கரையில் துணிவாக நிற்குமோ கப்பல்தான்

காதல் என்னும் சொல்லாலே கற்பை அழித்திடும் கன்னிகளை
சாதல்கொண்டு செல்வதையும் சகத்தினில் நீ யறிவாயே!
காய்ந்த நிலத்தைக் கனிவுறச்செய்யும் கடமை உணர்ந்த நல் நதியே
பாய்ந்து மக்கள் உள்ளந்தோறும் பசுமை படுத்த முயல்வாயே!

உணர்வோம்!

"மாஸ்டர் கமல் பாபு"

தாரணியின் பஞ்சம்-தனை நீக்கிடவே- தொழுகேற்றிடுவோம்....
தன்மனதின் வஞ்சம்-தனை போக்கிடவே தொழுகேற்றிடுவோம். 1

கடவுளை மறந்த காரணத்தாலே-கஷ்டகடலில் வீழ்ந்தோமே—
கடமைகள் ஐந்தில் தவறியதாலே-கொடுந்துயறில் ஆழ்ந்தோமே. 2

முடியும் வறையிலினி முயற்சி செய்து-மூர்க்கமதி ஒழிப்போமே—
முஸ்லிம் எனநாம் செயல்முறையாலே-மாநிலமறிய வாழ்வோமே. 3

நீதி தவறுமல் மனமதை ஆள்வோம்-நேர்மொழி புறுகான் ஓதிடுவோம்.
நினைவும் நாவும் நாயனைநாடி- நாயகர்போல் வாழ்வோமே. 4

தாழ்ந்தவரை இகழோம் தர்மம் கார்ப்போம்-தொழுகையை தினம் கடைபிடிப்போம். தாரகைபோல தாரணிமீதில்-தீனின்ஜோதியா வாழ்வோமே. 5

குபிரை நீக்கி ஷிர்கையும் விட்டு-கோமான்நபிவழி செல்வோமே....
காற்றுள்ளபோதே தூற்றுவதுபோல்-காதிம் கமல் சொல் உணர்வோமே.

மாயமாய்

மறைந்த மங்கை.

(தொடர் கதை 3–வது பகுதி)

அத்தியாயம் 5

உடனே மேரியாவினிடம் "இதன் கீழ் அறை உண்டா?" என்று கேட்டார்.

"இதன் கீழ் ஒரு அறையும் கிடையாது."

ஷம்ஸு மேரியாவைக் கூப்பிட்டுக் கொண்டு, எல்லா கதவுகளை திறந்து பார்த்தார். எங்கும் விசேஷமான தொன்றும் தெரியவில்லை. "பக்கத்து வீட்டின் கீழாகிலும் அறைகள் உண்டா?"

"கிடையாது. நீங்கள் வேண்டுமானாலும் வந்து பாருங்கள்" என்று சொல்லி பக்கத்து வீட்டுக்கு போகும் வழி கதவை திறந்தாள். அங்கு போய் படிகட்டின் கீழ் ஒரு கதவு தெரியவே, அதை ஷம்ஸ் திறந்தார். அது ஒரு வீட்டுக்குறிய சாமான்கள் வைக்கப்பட்ட அல் மேருவாக யிருந்தது. இவைக ளெல்லாம் யாருடைய தென்று ஷம்ஸ் கேட்க, ஸூஸியுடைய தென்றாள். "இங்கு இன்னும் யாரெல்லாம் தங்கி யிருக்கிறார்கள்?"

"டொனல்ட் என்று ஒருவன். அவன் வீட்டு பிளான்கள் எழுது பவன்; பிரபஸர் ஸான்டர் அவருடைய அஸிஸ்டென்ட்வுடன், ஜான் என்பவர், இன்னும் நாம் முன் பேசிய இருவர்கள்"

"பிரபஸர் ஸான்டர் யார்?"

"அவர் அதிகமாக படித்தவர் வயது முதிர்ந்தவர். மிருகம் சிறு ஜந்துக்களைப் பற்றி ஒரு புஸ்தகம் எழுதுகிறாராம். அவர் இருக்கும் அறையில் கண்ணாடி கேஸ்களில் அநேகவித பூச்சிகள் வைத்திருக்கிறார். அவருடன் ஒரு அஸிஸ்டென்ட்டும் தங்கி யிருக்கிறான்."

"சரி. அவர் மெத்தையில் தங்கிக் கொண்டிருப்பதால், அவரைப் பற்றி ஒன்றுமில்லை. சப்தம் கீழிருந்து வந்தது." என்று ஷம்ஸ்

சொல்லி விட்டு கீழேவுள்ள எல்லா அறைகளையும் பார்த்தார். ஒன்றும் கண்டு பிடிக்க முடியாம லிருக்கவே இருவரும் முன்னிருந்த அறைக்கு வந்தார்கள்.

"உங்களுக்கு ஒலிவாவின் கவலையினால் மனது சரியாகயில்லை. ஏதேதோ நினைத்துக் கொண்டே யிருக்கிறீர்கள். ஏதோ சப்தம் கேட்டதாகவும் தெரிகிறது. அநேகமாக நாளை ஒலிவா விஷயமாக கடிதம் ஏதும் வரலாம். ஆதலால் கவலைப்படாமல் சீக்கிரம் தூங்குவதே நல்லது" என்று ஸூலி சொன்னாள்.

"நீ சொல்வது தான் சரி. சீக்கிரம் சாப்பிட்டு விட்டு தூங்குவது தான் நல்லது" என்று ஷம்ஸூம் சொல்லவே, எல்லோருக்கும் இரவு சாப்பாடு அளிக்கப்பட்டதும், யாவரும் தங்கள் தங்கள் அறைக்குப் போயினர். ஷம்ஸூம் தனது அறைக்குப் போய் கதவை மூடினார். சாவியை கதவிலேயே உள்புரம் வைத்தார். சாவி அதிலேயே வைத்தால் மறுபுறத்தி லிருந்து கதவை திறக்க வேண்டுமானால், கொறடா முதலிய ஆயுதங்கள் போட்டு தான் திறக்க வேண்டும். அந்த கதவின் பூட்டு எண்ணெயிடாமல் பழையதாக யிருந்ததால் சப்தமில்லாமல் அக்கதவை திறப்பது கஷ்ட மென்பதை ஷம்ஸ் கவனித்தார். சாதிரும் பிரேசரும் தான் தூங்கும் போது வருவதானால் கதவை திறக்கும் சப்தத்தில் முழித்து விடலா மென்று எண்ணி, தூங்கினார்.

"இவ்வளவு நேரமாகியும் இன்னுமா தூங்குகிறீர்? உங்களுக்கு ஒரு கடிதமும் வந்திருக்கிறது. அதற்கு மேலுள்ள எழுத்தைக் கவனித்தால், ஒரு பெண்ணின் கையெழுத்தாக தெரிகிறது. உங்களுக்கு நல்ல சமாச்சாரமாக யிருக்கும்" என்று ஸூலி, ஷம்ஸிருக்கும் அறையின் கதவை தட்டி சொல்லி, அக்கடிதத்தை கதவின் கீழாலே தரையோடு அறையினுள் தள்ளினாள். ஷம்ஸ் உடனே எழுந்து அக் கடிதத்தை எடுத்து பார்த்தார். அதில் அட்ரஸ் "மிஸ்டர் ரோஸன் நெம். 6 ஸன்கோர்ட் டெர்ரஸ், போக்ஸ்டோன்" என்றெழுதி யிருந்தது. அதின் மேல் குத்தப்பட்ட போஸ்டாபீஸ் முத்திரையை அதிக நேரம் கூர்ந்து கவனித்தார். பின்பு அக்கடிதத்தை தான் உடைத்து பார்க்க லாமா என்று யோசித்தார். ரோஸனும் உடைத்துப்பார்க்க சொல்லுவார் என்றெண்ணிக் கொண்டே கவரை உடைத்து கடிதத்தை படித்தார். அதைபடித்ததும் கொஞ்சம் தனக்குள்ளாகவே சிறித்தார். அவர் மனதி லுள்ளகவலைகளுள் ஒன்று நீங்கியதாகவும் தோன்றியது. அக்கடிதம்:—

மிஸ்டர் ரோஸனுக்கு ஒலிவா எழுதும் விஷயமாவது, நான் ட்ரெயினில் வந்து கொண்டிருக்கும் போது, நமக்குள் நடக்கப் போகும் கலியாணத்தைப் பற்றி சிந்தித்துக் கொண்டே யிருக்கையில், உங்களுக்கும் எனக்கும் வயதால் மிகவித்தியாசமிருக்க, நாமிருவரும்கூடி வாழ்வதில் சந்தோஷமே யிராது என்னும் தீர்மானத்திற்கு வந்தேன். இந்த காரணத்தினுல் நான் அந்த வீட்டிற்கு வந்தால், மறுநாள் உங்களை சந்திக்க நேரிடு மென்னும் நோக்கத்தால், நான் வேறொரிடத்திற்கு போய் விட்டேன். நான் தங்களிடம் செய்து கொண்டிருந்த வேலைக் கும் என்னுல் வர முடியா தென்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இக்கடிதத்தைப் படித்ததும் என் பேரில் கோபமும், உங்களுக்கு மனக் கஷ்டமும் ஏற்படுவது சகஜமே. இருந்தாலும் கொஞ்ச நாட்கள் கழிந்த பின், நான் செய்தது தான் சரி என்று உங்களுக்கு தெரியவந்து என்னையும் மன்னிப்பீர்க ளென்று நம்புகிறேன்.

இப்படிக்கு
ஒலிவா.

"என்ன! சப்தமிடாமலிருக்கிறீர்கள். உனது காதலி எழுதிய கடிதமா?" என்று ஸூஸி அறையின் வெளியிலிருந்து கேட்டாள்.

"ஆம்" என்று பதிலளித்தார்.

"மிக்க சந்தோஷம். எங்காவது சவுக்கியமா யிருக்கருளல்லவா?"

"ஆம். சவுக்கியமா யிருக்கிறுள். இருந்தாலும் சந்தோஷகரமான சமாச்சாரமாயில்லை. எல்லாம் பின்பு கீழேவந்து சொல்லுகிறேன்" என்று ஷம்ஸ் துக்ககரமான குரலில் சொன்னுர். ஆனுல் ஷம்ஸ் முகம் சிறித்தவாறிருந்தது ஸூஸிக்கு தெரியாது.

"உங்களுக்கு எந்த கஷ்டத்திலும் ஒத்தாசை செய்ய எப்பொழு தும் நான் தயாரா யிருக்கிறேன்" என்று ஸூஸி சொல்லிவிட்டு சென் ருள். அவள் போனதை காலடிசப்தமூலம் அறிந்த ஷம்ஸ் தனது அறையிலேயே இங்குமங்கும் உலாத்திக் கொண்டே கையிலுள்ள கடி தத்தை மறுமுறையும் படித்தார்

"நான் தலையிடாம லிருப்பதற்கு செய்தவழி! நல்ல புத்தி! யோசனை யுடன் செய்திருக்கிறுள். அவளை வற்புறுத்தி எழுதப்பட்ட கடிதம்! கை நடுக்கத்துடன் எழுதியது தெரிகிறது" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டார்.

"இந்த கையெழுத்து ஒலிவா கையெழுத்தா யில்லாவிட்டால் ரோஸனுக்கு தெரிந்துவிடும். அதனுல் இது ஒலிவா கையால் எழுதிய தாகவே யிருக்கும். அதனுல் அவள் உயிருட னிருக்கிறு ளென்பது தெரியவருகிறது. இரவு நாம் கேட்ட சப்தம் அவளுடையதா? இந்த கடிதத்தை எழுதுமாறு அவளை ஹிம்சை செய்யும்போது அவள் போட்ட சப்தமா?" என்றும் யோசித்தார். பின்பு கால்மணி நேரத் திற்குள் ஸ்நானம் செய்துவிட்டு காலை நாஷ்டாவிற்காக கீழே சாப்பாட்டு அறைக்கு வந்தார். அங்கு மேரியாவுடன் அங்கு தங்கி யிருப்பவர் களுள் சிலரும் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். மேரியா ஷம்ஸைப் பார்த்ததும் "தங்களுக்கு நல்ல சமாச்சாரம் கிடைத்ததாக ஸூஸி சொன்னுளே"

"ஆம் இதுவரை வீணுக கவலைப் பட்டுக் கொண்டிருந்தேன்" என்று ஷம்ஸ் சொல்லியபின், வேறென்றும் சொல்லாமல் நாஷ்டா சாப்பிட்டு விட்டு, தன்னுடைய காதலை நிராகரிக்கப்பட்ட காதலன் எவ் வாறு மனச் சோர்வுடன் தோன்றுவானே அவ்வாறு நடித்தவாறு அவ் வீட்டை விட்டு வெளிவந்து, கடல் பக்கமாக வெயிலில் மெதுவாக நடந்து போனுர். தன்னை பின்னுலிருந்து ஸூஸி கூப்பிடுவதாக தெரிந்து திரும்பினுர்.

"ஒலிவா சௌக்கியமா யிருக்கிறுள். ஆனுல் சந்தோஷமான சமாச் சாரமாகயில்லை யென்று சொன்னீர்களே அதன் விபரம் என்ன?" என்று ஸூஸி கேட்டவாறு அவருடனேயே ஹார்பர் பக்கமாக நடந் தாள். ஷம்ஸ் அதற்கு ஒன்றும் பதில் சொல்லாமலே நடந்தார். கடல் தண்ணீரினருகே வந்ததும், ஏதோ அப்பொழுதுதான் நினைத்தவாறு திடீரென்று தனது ஜேபியிலுள்ள கடிதத்தை எடுத்து ஸூஸியிடம் கொடுத்தார். அதை அவள் படித்தபின் "ஓஹோ! அதனுல்தான் இந்த வீட்டிற்கே வரவில்லை. தற்போது நீங்கள் என்ன செய்யப் போகி றீர்கள்?" என்று கேட்டாள்.

"வழமையாக இதைப்போல் ஏற்பட்டால் காதலன் என்ன செய் வான்? யாருக்கும் அறிவிக்காமல் எங்காவது ஓடிப்போவா னல்லவா?" என்று ஷம்ஸ் வினவினுர்.

"நான் படித்த காதல் கதைகளில், காதலன் நீங்கள் சொல்லியபடி ஓடிப்போக படித்திருக்கிறேன்" என்றுள்.

"ஆனால் நான், பெண்களின் குணமே அவ்வாறுதான் என்று என் மனதிற்கு சொல்லிக்கொண்டு, தங்கப்போகிறேன்"

"அப்படியானால் நீங்கள் லண்டனுக்கு திரும்பி போகமாட்டீர்களா?"

"எதற்காக போகவேண்டும். அவள் சொல்லியது சரியாகவுமிருக்கலாம். வயது வித்தியாசத்தால் வாழ்க்கை நன்றாயிராமலிருக்கலாம். அதனால் இங்கு வேறு எதையாவது நமக்கிஷ்டமானதை பார்த்து மனதை திருப்பவேண்டியதுதான்" என்று ஷம்ஸ் சொல்லியவாறு ஸூஸியை உற்று கவனித்தார். அவர் பதிலை கேட்டதும் ஸூஸியின் முகம் மாறியது. இருந்தாலும் சமாளித்துக்கொண்டு, "எனக்கு கொஞ்சம் வேலை அவசரமாகயிருக்கிறது நான் போய் வருகிறேன்" என்று சொல்லி திரும்பி போய்விட்டாள். அவளைப் பின்னால் பார்த்துக்கொண்டே ஷம்ஸ் மெதுவாக தனக்குள்ளாக "நான் சொன்னது உனக்கு ஒரு பெரிய அதிர்ச்சியைக் கொடுத்து விட்டது. இதோடு நிற்கப்போகிறதா? உனக்கும் இன்னும் சிலருக்கும் உடனுக்குடனே அதிர்ச்சி ஏற்பட்டுக் கொண்டே யிருக்கும்" என்று சொல்லிக்கொண்டார்.

பிறகு ஷம்ஸ் போலீஸ் ஸ்டேஷனுக்குப்போய் இன்ஸ்பெக்டர் பாட்கினைப்பார்த்து வெஸ்டர்பி கொலை விஷயமாக ஏதாவது அறிந்தீர்களா வென்று விசாரித்தார். அவர் இதுவரை ஒன்றும் தெரியவில்லை யென்றும் ஜான்ஸனைப்பற்றியும் அவனுடைய பட்லரைப்பற்றியும் ஒன்றும் தகவல் கிடைக்கவில்லை யென்றும் சொன்னார். அங்கிருந்து ஷம்ஸ் பெஸ்ட் ஹோட்டலுக்குப் போனார்.

"ரோஸனை போக்ஸ்டோனுக்கு வரவேண்டாமென்றும் லண்டனிலேயே இருக்குமாறு போன்மூலம் சொல்லி அவர் ஒத்துக்கொள்வதற்குள் மிக கஷ்டமாகிவிட்டது. அவ்வீட்டில் வேறு ஏதும் விசேஷம் கிடைத்ததா?" என்று சோடே கேட்டான்.

"விசேஷம் ஏற்படாமலில்லை" என்று ஷம்ஸ், அவ்வீட்டில் நடந்த விஷயங்களெல்லாம் விபரித்தார்.

"என்னை, ஒரு சாதாரண பேர்வழி, அக்கடிதத்தைப் பார்த்ததும் போக் ஸ்டோனைவிட்டு கிளம்பி விடுவேன் என்று நினைத்தார்கள். 6 கெ. வீட்டிலோ அல்லது அதற்குபக்கத்து வீட்டிலோ ஏதாவது முக்கிய சம்பவம் நடைபெறு மென்று நினைக்கிறேன்" என்றும் ஷம்ஸ் சொன்னார்.

"நானென்ன செய்யவேண்டும்?"

"நான் போனபின், நான் ஒலிவா உயிருடனிருப்பதாக நினைப்ப தாகவும் அவளை எவ்வாறும் கண்டுபிடித்து கூடிய சீக்கிரம் அவரிடம் சேர்ப்பதாக, ரோஸனுக்கு டெலிபோன் மூலம் தெரிவித்துவிடு. பின்பு இங்கேயே தயாராகயிரு. திடீரென்று உனது உதவி தேவைபடும்"

"வெஸ்டர்பி கொலையைப்பற்றி போலீஸ் விசாரணை கூட்டம் நாளை நடக்கப்போகிறதாம். உங்களுக்கு தெரியுமா?"

"தெரியும். நான் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போயிருந்தேன். நாளை விசாரணையை துவக்கம் செய்து கொஞ்சம் விசாரித்தபின் வாய்தாபோட்டு விசாரணையை கொஞ்சநாளைக்கு தள்ளி வைப்பார்களாம்"

"எனக்கு அவ்விசாரணைக்கு வரவேண்டு மென்று ஸம்மன் வந்தி ருக்கிறதே"

"எனக்கும் பாட்கின் இன்ஸ்பெக்டர் ஸம்மன் கொடுத்தார். நாம் போய்தான் தீரவேண்டும். அங்கு கொலைசெய்த கூட்டத்திலுள்ளவர் களும் வந்திருக்கக்கூடும். அதனல் நாம் யாரென்பதையும் அவர்கள் அறியக்கூடும். ஆனல் நாளையிலிருந்து நாம் உஷாராக யிருக்கவேண்டி யதுதான்" என்று ஷம்ஸ் சொன்னர்.

"எனக்கு மனது கவலையாக யிருக்கிறது. அந்த கொலைசெய்த கூட்டம் போலீஸுக்கு கொஞ்சமும் பயபடமாட்டார்கள். ஆனல் உங்களைக் கண்டதும் அவர்களுக்கு பயம் கிளம்பி விடும். அதனல் எந்த வகையிலும் உங்களை நள்ளிரவில் பிடித்து சதி செய்ய ஏற்பாடு நடக்குமென்று நினைக்கிறேன்" என்று சோடே கவலையுடன் சொன்னன்.

"இதற்கு முன்னும் எத்தனையோ பேர் வழிகள் என்னை தொலைக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்யவில்லையா? நான் இன்னும் உயிருடனி ருக்கிறேன. ஆதலால் நீ ஒன்றும் கவலைப்படாதே. நான் இனி தூங்கும் போதும் ஜாக்கிரதையாகத்தான் இருப்பேன்" என்று சோடேவின் முது கைதட்டியவாறு தைரியம் சொல்லி அங்கிருந்து பிறப்பட்டார் ஷம்ஸ்.

ஷம்ஸ் நேராக அவ்வீட்டிற்கு வந்தார். அங்கு ஓய்வுக்காக தங்கி யிருப்பவர்களெல்லாம் அக்கிராமத்தை சுற்றிப்பார்க்க வீட்டைவிட்டு வெளியில் வந்துகொண்டிருந்தார்கள். அவ்வீட்டினுள் மேரியா அங் குள்ள வேலைக்காரியிடம் ஏதோ வீட்டு வேலையை ஏவிக்கொண்டிருந் தாள். ஷம்ஸ் ஹாலுக்கு இடப்பக்கத்திலுள்ள முன் அறையில் ஒரு

நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு ஒரு பத்திரிக்கையை படிப்பதுபோ லிருந்தார். ஆனல் அவர் உட்கார்ந்தவிடத்திலிருந்து ஹாலேயும் ஜன்னல் வழியாக வீட்டுக்குவரும் பாதையையும் பார்க்க தோதுவாயிருந்தது. அன்று காலேயிலும் மாலேயிலும் ஒன்றும் விசேஷம் நடைபெறவில்லே. ஆனல் ஸுஸியை ஒருமுறை ஹால்பக்கம் வர பார்த்தார். முன்பு ஸூஸி தன்னுடன் பழக்கம்பண்ண எவ்வளவு ஆசையுள்ளவளாக யிருந்தாளோ அவ்வளவுக்கவ்வளவு தற்போது மாருக தன்னே சந்திக்க விருப்பமில்லாதவளாக யிருப்பதாக ஷம்ஸ் அறிந்து தனக்குள்ளாகவே சிறித்தார்.

அன்றிரவி லிருந்து ரோஸனுக்காக ஏற்படுத்தப்பட்ட அறையில் படுக்க வேண்டிய திருந்தது. ஷம்ஸ் இரவு 11 மணிக்கு அந்த அறைக்கு போனர். தான் இரவில் வழமையாக குடிப்பதற்காக பாலும் வைக்கப்பட்டிருந்தது. ஷம்ஸும் அதை குடிப்பதற்கு முன் வழமைபடி அதை முகர்ந்து பார்த்தார். அதில் மயக்க மருந்து கலந்திருப்பதை வாசனே மூலம் அறிந்தார். அந்த பாலே குடிக்காமல் படுக்கையில் தூங்காமல் படுத்தார். "பாலில் மருந்தை கலந்தவன் கட்டாயம் தான் மயக்க முற்றிருப்பதாக நினேத்து வரக்கூடும்" யென்று நினேத்தார். சுமார் 20 நிமிஷங்கள் கழிந்ததும் யாரோ தன் அறை கதவை திறக்க முயற்சிப்பதாக தெரிந்தது. கதவு உள்பக்கம் பூட்டப்பட்டிருக்கவே தட்டப்பட்டது. அறையினுள்ளிருந்து சப்தம் யாதொன்றும் வராமலிருக்கவே, ஏதோ ஆயுதங்களே உபயோகித்து கதவின் பூட்டை திறக்கப்பட்டது. கதவும் மெதுவாக கொஞ்சம் திறக்கப்பட்டதும் ஒரு தலே மாத்திரம் முன் வந்து அறையினுள் கவனித்தது. அது சாதிர் தடியனுடைய முகம். அறையினுள் கட்டிலின் மேல் ஷம்ஸ் ஸ்மரணே யற்று தூங்குவதைக் கண்டு சாதிர் மனதுக்குள் சந்தோஷமானன். அந்த கட்டிலின் கீழ் ஒரு பாதி சிகரேட் புகைந்து கொண்டிருப்பதையும் கவனித்தான். கட்டிலினருகே மெதுவாக வந்தான். பக்கத்தில் மேஜையின் பேரில் ஒரு கிளாஸ் டம்ளர் காலியாக யிருந்தது. அதை எடுத்துக் கவனித்தான். அதில் பாலே ஊற்றி குடித்தவாறிருந்தது. தனக்கு சந்தேகம் தீர, அந்த டம்ளரை எடுத்து முகர்ந்து பார்த்தான். கீழே புகைந்து கொண்டு கிடக்கும் சிகரேட்டை காலிலுள்ள பூட்ஸால் நசுக்கினன்.

"நான் நினேத்தபடி மாட்டிக் கொண்டாய். மயக்கமுற்று கிடக்கும் போது நெஞ்சில் ஒருகத்தி இறங்கினல் மிகவும் நன்ருக யிருக்கும்"

என்று சாதிர் தனக்குத் தானே சொல்லிக் கொண்டே தனது ஜேபியி லிருந்து ஒரு கத்தியை எடுத்தான். பிறகு "நமக்கென்ன! நாம் சொன்னபடி தானே செய்ய வேண்டும்" என்று முனுமுனுத்துக் கொண்டே, கத்தியை ஜேபியில் போட்டு விட்டு, அறையின் வெளியே வந்து கதவை ஒரு ஆயுத மூலம் முன்னிருந்தவாறு மூடி விட்டு சப்த மிடாமல் மெதுவாக நடந்து கீழே போய், வீட்டின் முன் மைதானத்தி லுள்ள ஒரு மரத்தின் கீழ் இருட்டில் நின்று கொண்டிருக்கும் பிரேஸ ரிடம் வந்தான்.

"அவன் பிணம் போல் கிடக்கிறான். நாம் காரை கொண்டு வந்து தயாராய் வைத்தால், பெரியவர் அவர்களை யெல்லாம் கொண்டு போக ஒழுங்காக யிருக்கும்" என்று மெதுவாக பிரேஸரின் காதினருகே சொன்னான். இருவரும் காரின் ஷெட்டினருகே போனார்கள். பிரேஸர் தன்னிட மிருந்த சாவியினால் ஷெட் இரு கதவுகளையும் திறந்தான். பிரேஸர் உள்ளே போய் காரை ஸ்டார்ட் செய்தான். கார் வெளியில் வரும்வரை சாதிர் வெளியே நின்று கொண்டிருந்தான். கார் மெதுவாக வந்து கொண்டிருக்கும் போது, ஏதோ ஒன்று அவ்வீட்டின் மெத்தை யின் ஒரு ஜன்னலி லிருந்து, சாதிரின் காதில் விழுந்தது.

"அப்பாடி! யார்?" என்று கோபத்துடன் சொல்லியவாறு தன் மேல் விழுந்த வஸ்து என்ன வென்று எடுத்துப் பார்த்தான். அது பெண்கள் தலைவாரக் கூடிய பிரஷ். அதைப் பார்த்ததும் அவனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. "தங்களுக்கு அபாயம் என்று அறிவிக்க இதை யாரோ போட்டிருக்கலாம்" என்று நினைத்து ஓட ஆரம்பித்தான். ஆனால் பக்கத்திலுள்ள செடிகளுக்கு பக்கத்தில் ஏதோ ஒரு மனித உருவம் நிற்பதாகவும் தெரிந்தான். ஆனால் அங்கு நின்று கொண் டிருந்த ஷம்ஸ் இனியும் ஒளிந்து நிற்பதில் பிரயோஜனமில்லை யென்று எண்ணி, கொஞ்சம் முன் வந்து,

"சாதிர்! இன்று செய்த மாதிரி, இனி மேலும் என் பாலில் எதையாவது ஊற்றி கொடுத்தாயோ, உன்னை விடவே மாட்டேன். உன் விஷயம் பூராவும் போலீஸுக்கு தெரிவித்து விடுவேன். உன்னால் இன்றிரவு நான் பாலே குடிக்கவில்லை" என்று ஷம்ஸ் சொல்லிக் கொண்டே, பக்கத்தில் நின்று கொண்டிருந்த காரின் டைரை கவனித் தார். அதே டைர் தான் என்று தீர்மானித்தார்.

(தொடரும்.)

நல்லுபதேசம்.

(அய்யம்பேட்டை S. அப்துர் ரஜாக் ஸாஹிப்)

விமோசன நம்பிக்கை.

'அடியானும் சிருஷ்டிகர்த்தனும்' என்பதைக் குறித்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு நாள் பின்வருமாறு மொழிந்தருளினார்கள். அது பற்றி ஹஸ்ரத் அனஸ் பின்மாலிக் ரிவாயத்துச் செய்கிறார்கள்:—

"எல்லாம் வல்ல இறைவனுக்கு தன் அடியார்களிடத்து அளவு கடந்த அன்பு உண்டு. அவன் அவர்களை அவர்களது பெற்றோர்களைக் காட்டிலும் அதிகம் நேசிக்கிறான்."

நாயகம் (ஸல்) அவர்களின் திருமொழிகளை செவியுற்ற ஒருவர், உடனே எழுந்து நின்று "நாயகமே! என்ன, கியாமத் நாளையில் நம் சிருஷ்டிகர்த்தன் நம்பேரில் இரக்கப்படுவானா, அந்த இரக்கத்தின் ஆதரவில் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு விடுமா" எனக் கேட்டதற்கு பின்வருமாறு விடைபகரப்பட்டது.

கியாமத் நாளில் ஆண்டவன் தன்மூமினான அடியார்களிடம் "என்ன நீங்கள் என்னைக் காணவேண்டுமென ஆவல் கொண்டிருந்தீர்களா?" எனக்கேட்பான். அவ்வமயம் அந்த அடியார்கள் "ஓ மாட்சிமை தங்கிய இறைவனே! நாங்கள் உன்னைக்காண கொண்டிருந்த ஆவல் இவ்வளவு அவ்வளவு அல்ல" என்று முறையிடுவார்கள். "ஏன்? எதற்காக? அப்படி" என்றுமீண்டும் ஆண்டவனால் வினவப்படும் போது மூமீன்கள் "நாயனே! நாங்கள் உன்னிடம் எங்கள் பாவங்களை பொறுத் தருளுமாறு இறைஞ்சிக் கேட்பதற்காகவே உன் தரிசனத்தை பெரிதும் வேண்டி யிருந்தோம்" என்று முறை யிடுவார்களாகில் "நான் உங்கள் பாவங்களை மன்னித்து விட்டேன்" என்று இறைவன் கட்டளை யிடுவான்.

இந்த ஹதீது அல்லாஹுக்கும் அடியாருக்கும் இடையில் உள்ள சம்மந்தத்தை நன்கு வெளிப்படுத்துவதாகும். ஆனால் அடியார்களுக் கிடை பெரும்பாலார், ஆண்டவனை நினையாது அடியார்களுக்குள் உயர் தர அந்தஸ்து வாய்ந்தவர்களை முகஸ்துதி செய்து அவர்களுக்கு வழி பட்டு நடப்பதிலேயே ஈடுபட்டிருக்கிறார்கள். அல்லாவுக்கும் அடியானுக்கும் இடை எவ்வித நெருங்கிய சம்பந்தமிருந்து வருகிற தென்ற ரகசியம் தெரிந்த பின்னராவது அவனை [illegible] நடக்கும் துறையில் எல்லா விதத்திலும் ஆயத்[illegible]யிருப்போமாக. [illegible]ன் !

187024

இஸ்லாம் லௌகீகம், வைதீகம் இரண்டையும் போதிக்கிறது.

மானிட வாழ்க்கையின் ஒவ்வொரு முன்னேற்றத் துறையிலும் இஸ்லாம் பரிபூரணபயிற்சி யளித்துள்ளது.

ஆண்டவன் வணக்கம், பரிசுத்தம், மனச்சுத்தி, ஆத்ம ஞானம் ஆகிய துறைகளில் அது உயரிய பயிற்சி யளிப்பது போலவே சமூக ஒற்றுமை, சமத்தும், சேர்ந்து வாழ்தல் ஆகிய துறைகளிலும் உயரிய கொள்கை கோட்பாடுகளைக் கொண்டுள்ளது. இம்மை மறுமை இரண்டிலும் முன்னேற்ற மடைதல் அவசியம் என்றே அது பயிற்சி யளிப்பதாகும்.

"முஸ்லிம்களே ! இம்மைக்காக வேண்டி மறுமையும், மறுமைக்காக இம்மையையும் கைவிடாமல் அவ்வலுவல்களில் சிரத்தைக் கொண்டிருப்பவனே உங்களுக்கிடை நல்லவனுவான்" என ஹதீது வந்திருக்கின்றது.

"ஹலாலான வஜீபனத்தை தேடி நடுத்தரமான செலவு செய்பவனும் எதிர் காலத்திற்காக வேண்டி ஏதேனும் பொருள் சேகரித்து வைப்பவனும் நல்லவன். ஆண்டவன் அத்தகைய மனிதன் பேரில் கிருபை செய்வான். தடையின்றி ஐசுவரியம் இன்றியமையாத பொருளேயாகும். அதனை கிரமமான வழியில் செலவு செய்பவர்களுக்கு ஆண்டவன் பரக்கத் அருள் புரிகிறான். (மஸ்னத் இமாம் அஹமத்)

மதக்கட்டுப்பாடுகளுக்கு வழிபடுதல்.

மதத்தின் அவசியத்திற்கும் அதன் சிறப்பிற்கும் ஒரு சிலர் தலை சாய்க்காம லிருப்பினும் சரியே—அவர்கள் அல்லாஹு தஆலா உடைய வசனத்தை மாத்திரம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதிலிருந்து அவர்களுக்கு "மதம்" (குறிப்பாக இஸ்லாம்) எவ்வளவு கண்ணியத்திற்குரியதாகும் என்ற இரகசியம் நன்கு வெளியாகும். நீங்கள் சற்று சரித்திர ஆராய்ச்சியில் ஈடுபடுவீர்களாகில், இறைவனுக்கும் அடியார்களுக்குமிடை நெருங்கிய சம்பந்தத்தை ஏற்படுத்தியும் உலகின் கண் மக்களுக்கிடை அன்பும் பிரீதியும் அமைதியான வாழ்க்கையும் முதன் முதல் நிறுவச் செய்தது பரிசுத்த இஸ்லாம் என்பதே அதிலிருந்து ஊர்ஜிதமாகும்.

உலகம், மூடத்தனத்திலும் அந்தகாரத்திலும் சிக்குண்டு போய் அனுச்சாரமே தலைகாட்டி வந்தது. இடந்தோறும் சண்டை சச்சரவுகள், படுகொலை சம்பவங்கள், கொடுங்கோன்மைகளின் காட்சிகள் ஆகியவை

களே தலைகாட்டி வந்தன. அப்பேர்ப்பட்ட சமயத்தில், இஸ்லாம் ஒளி பிரகாசிக்கவே, அந்தகாரம் ஒழிந்து உலகமக்களுக்கிடை அன்னியோன்னிய ஒளி பிரகாசிக்க ஆரம்பித்தது.

கிருபை கடாக்ஷமுள்ள இஸ்லாம் ஸ்தாபகரான நபி பெருமானவர்கள் தோன்றி அல்லாவை நிராகரித்தோரை அவன் உண்மை விசுவாசிகளாக்கியும் இரக்கமற்ற கொடுங்கோலர்களை இரக்க முள்ளவர்களாக்கியும் வாழத்தக்களவில் நற்போதனை யளித்தார்கள். படுகொலைக்குரிய அதிக்கிரமச் செயல்கள் அழிவுற்றன.

அல்லும் பகலும் அநீதி அக்கிரமச் செயல்களையே கடைபிடித்து பாவமான காரியங்களையே தம் சுபாவத்திலுள்ளவை எனக்காட்டத்தக்களவில் முயன்று வந்தவர்களை மேம்பாடான பேணுதல் உள்ளவர்கள் பயபக்தர், அளவிறந்த இரக்கம் படைத்தோர்களாக செய்து வைத்தார்கள்.

இன்றைக்கு இஸ்லாம் தோன்றுமலும் அல்லாவுடைய கட்டளைகளின் பிரசாரம் வெளிவராமலும் இருந்திருக்குமானல், உலகம், நாகரீகத்துறையை யடைந்திருக்கக் காரணமில்லை. நேர்மை, யதார்த்தம் ஆகியவற்றின் நாமதேயமே தெண்பட்டிராது. ஏழை, செல்வந்தர், எல்லோருமே சமத்துவமாய் வாழ்ந்திருக்க முடிந்திராது. இன்று அல்லாவுடைய பள்ளிவாசலில் ஏழை தொண்டமான் எல்லோரும் சமத்துவ அந்தஸ்திலிருந்து தொழுது கொள்ளுகிறுர்கள். மதத்தில் உள்ள உண்மை விசுவாசிகளும் அதன் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டிருந்த பெரியார்களும் எவ்வாறு ஒழுகிவந்தார்க ளென்பது அடியிற்கண்ட விஷயங்களினுல் நன்கு விளங்கும்.

ஒருநாள் ஹஸ்ரத் உமர் பாரூக் (ரலி) அவர்கள் திருமக்கமாநகரின் "ஹாரதுல்யமன்" பெயர்கொண்ட ஒரு மஹல்லாவின் வழியே சென்று கொண்டிருந்த சமயம், ஷாம் தேசவாசியான முஸாபிர் (பிரயாணி) ஒருவரை சந்தித்தார்கள். பிரயாணி அச்சமயம் அங்குள்ளதோர் மேடையின்மீது உட்கார்ந்திருந்தார். விசேஷ மனக்கலக்கத்தின் நிமித்தம் அவர், கண்ணீர் சொரிந்தவராகவும் தென்பட்டதன் பேரில் ஹஸரத் அவர்கள் அவரிடஞ்சென்று சங்கதி விசாரித்தார்கள். அப்போது அவர் சொல்லுகிறுர் "அல்லா, உமர், என்பவரை நாசமாக்கவேண்டுமென நான் துவாச் செய்கிறேன், அவர் எங்கள் விஷயத்தில் கல்நெஞ்சு படைத்திருக்கிறுர், அநீதம் செய்கிறுர்" என்று பதில் கூறினுர்.

"உங்களுக்கு உமர் செய்த அநீதம் என்ன?" என்று ஹஸரத் கேட்டார்கள். அதற்கு பிரயாணி பின்வருமாறு விவரித்தார்.

"அவர், முஸாபிர்கள் தங்குவதற்கு இடந்தோறும் முஸாபிர்கானே (பிரயாணி சத்திரங்கள்) கட்டி அவர்களுக்கான சௌகரிய ஏற்பாடுகளை

செய்து வைத்தாரா? இல்லே, அவர் முக்கிய விஷயத்தில் அலக்ஷிய மாயிருந்துவிட்டார். நான் ஷாம் நாட்டுவாசி என் மனேவியோ கர்ப்பவதி—பிரசவ நேரம் சமீபித்துவிட்டது. இச்சமயம் என்மீது இரக்கப்படுவோர்இல்லே அல்லாவைத் தவிர. துணைக்கு வேறு மனுஷா ளும் கிடையாது. செலவுக்கு யாதொரு பணமும் இல்லேயே, என்ன செய்வேன்!"

பிரயாணியின் அவ்வித மொழிகளேக் கேட்ட ஹஸரத் உமர் தம் வீட்டை நோக்கி விரைந்தோடினுர்கள். தம் மனேவியாரிடத்தில் "அல் லாவுக்காக இது சமயம் என்னேடு வருவதில் துரிதப்படுத்துவாய்" என்ருர்கள்.

அதைக்கேட்ட மனேவியார், க்ஷணமே ஸ்தலத்திற்குச் சென்று பிரசவகாரியத்தில் ஈடுபட்டுவிட்டார்கள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் குழந்தை பிறந்தது. ஹஸரத் உமர் 40 தீனர் நாணயங்களே அந்த முஸாபருக்கு வெகுமதியாக கொடுத்தார் கள். கொடுத்துவிட்டு, திரும்பிப்போகும்போது அவர்கள் அந்த முஸா பரிடத்தில், "நான் உம்மிடம் மன்னிப்புக் கேட்கிறேன், அந்த உமர் பெயர் கொண்டவன் நானேயாவேன்" என்று வேண்டிக்கொண்ட போது முஸாபிர், அவர்களே நோக்கி "உமர் என்பவர் பெரிய கோபசாலி இரக்கமற்ற நீதிவான் என்றல்லவோ நான் கேள்வியுற்றிருக்கிறேன். அதற்கு மாருக தாங்களோ மிக்க இரக்கம் படைத்தவர்களாக இருக்கி றீர்கள். இது என்ன சங்கதி?" எனக்கேட்டபோது அதற்கு உமர் (ரலி) விடை பகர்ந்தார் யாதெனில் "சந்தேகமன்றி நான் கோபசாலித்தான். ஆனுல் இஸ்லாம் மதக்கட்டளேயானது என் கோபத்தை அடக்கி விட்டது.

நீர் பாதையில் என்னிடம் ஆண்டவன் உமரை நாசப்படுத்துக. அவன் அநீதிவான் இரக்க மற்றவன். கல்நெஞ்சன் முதலிய வார்த்தை களே உபயோகித்த போது நான் அளவிலா ஆத்திரத்தை அடைந்தேன். உன் தலேயை வெட்டிவிட வேண்டு மென்றும் எண்ணினேன். அவ் வேளே என் மனம் எனக்கு—சிந்தித்துப்பார். அவசரப் படாதே-நீதி நெறியின் ஆராய்ச்சி அவசியம் குறுக்கிட்டிருக்கிறது. அவனே வியா கூலம் நிறைந்த ஓர் முஸாபிர், மனக் கொதிப்பில் அவன் வாயை விட்டும் தற்செயலாக சில மொழிகள் வெளி வந்திருப்பின் அவை மன்னிப்புக்குரியவைகள்—என்று போதித்தது.

அப்போதனேயைக் கேட்டு நான் தலே குனிந்தேன். என் ஆத்தி ரத்தையும் தணித்துக் கொண்டேன்."

'ஜாமியுல்மனுகிப்' என்ற நூலில் பின் வருமாறு கண்டிருக்கிறது. ஒரு நாள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தம் ஜாகையில் வீற்றிருக்கை

யில் ஓர் அராபியர், அவரிடம் வந்து, "ஓ சீமானே இறைவன் கோபாவேசம் உம்மீது உண்டாவதாக!! நீ பெரிய கொடுங்கோலன். நீ உன் பிள்ளைக்குட்டிகளை மாத்திரம் கவனித்துக் கொள்ளுகிறாய்-என் பிள்ளைக்குட்டிகளைப் பற்றி உனக்கு கிஞ்சித்தும் கவலை கிடையாது. 'நாங்கள் எல்லோரும் இரண்டு நாளாக பசிப் பிணியால் மடிகிறோம்." என்று கதறினார்.

அந்த வசமொழிகளைக் கேட்ட ஹஸ்ரத் (அலி) கோபக் கடலில் ஒருவாறு ஆழ்ந்தார்கள். திட்டின அராபியரை நையப்புடைக்க வேண்டும் என்றே மனதில் வந்தது. ஆனால் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் உடனே மதக் கட்டளையை யனுசரித்து சிந்தித்துப் பார்த்தார்களாகில், துன்பத்திற் காளானவன்மீது இரக்கப்பட வேண்டுமே யல்லாது ஆத்திரம் கூடா தென்ற இரகசியம் ஞாபகத்திற்கு வந்தது.

எனவே, ஹஸ்ரத் (ரலி) அவர்கள், அந்த அராபியருக்கு 4 பேர்களுக்குரிய சாப்பாட்டுடன் 10 தீனார் நாணயங்களையும் வெகுமதியாக அருள் புரிந்தார்கள்.

வலீத் பின் அப்துல் மலிக், ஒரு நாள் நிஸான் என்ற காட்டிற்குச் சென்றிருந்த போது தற்செயலாக அவரது கூடாரத்திற்கு முன் அழகிற் சிறந்த பெண் ஒருத்தி செல்வதைக் கண்டு மதிமயங்கி விட்டார். உடனே அக்குமரியை தம் ஜாகைக்கு அழைத்து வந்து விட்டார். ஆனால் அதற்கு மேற்பட்டும் அவர் மனம் இச்சித்ததேயானால், மதவிலக்குச் சட்டம் அவர் மனதில் உதித்தது. அதாவது "அப்பெண் உனக்கு ஹராமாகும். அவளை யாருக்காக பரிசம் போடப்பட்டிருக்கிறதோ அந்த மாப்பிள்ளைக்கே அது உரியது" என மனசாட்சி ஞாபக மூட்டியது.

உடனே, வலீத், மனம் நடுங்கி அவரை கை விட்டது மட்டுமல்லாது அவளிடம் மன்னிப்பும் கேட்டுக் கொண்டார்.

ஒரு நாள் கலீபா மாமூனுர் ரஷீத் தம் பிரத மந்திரியின் மாளிகையின் மேல் வீற்றிருந்த போது அவர் மாளிகையின் கீழ் சுவற்றின் மேல் யாரோ ஒருவன் ஏதோ எழுதிக் கொண்டிருப்பதாகக் கண்டார். உடனே அந்த எழுதுபவரை கைது செய்து தமக்கெதிரில் கொண்டு வருமாறு கலீபா கட்டளை பிறப்பித்தார்.

குற்றவாளி எதிரில் கொண்டு வரப்பட்ட போது "நீ என்ன எழுதிக் கொண்டிருந்தாய்?" என வினவப்பட்டது.

முதலில் அவன் பதிலளிக்க வில்லையாயினும், இரண்டாவது தடவை கண்டித்துக் கேட்கப்பட்ட போது "ஆண்டவன் மாமூனுர்

ரஷீதை நாசப்படுத்துக, அவன் சுயநலமி, ஆனந்த வாழ்க்கை அனுபவிக்கிறான். எளியோரை கவனிக்கவில்லை-இந்த மாளிகை அழிந்து போகும் தினத்தன்றே நான் ஆண்டவனுக்கு நன்றி பாராட்டுவேன்.'' ஆக இந்த வாக்கியங்களையே நான் சுவற்றின் மீது எழுதிக் கொண்டிருந்தேன்'' என்றான்.

கலீபா மாமூன் மேன்மையும் கம்பீரமும் வாயப்பெற்றிருந்ததற்கேற்பவே அவர் சுபாவத்தில் தீவிர கோபங் கொள்ளலும் சகஜமாக இருந்து வந்தது. அவர் அந்த சமயத்தில் நினைத்திருந்தால் அக்குற்றவாளியை மரண தண்டனைக் குள்ளாக்கி யிருக்கக்கூடும்.

ஆனால் தரித்திரப்பிணியில் சிக்குண்டு கிடக்கும் அவன் தன் மனம் புண்பட்டல்லவோ அவ்வாறு செய்துள்ளான். ஆகையால் அவன் குற்றம் மன்னிப்புக்குரியதே என்றெண்ணி அவனுக்கு மன்னிப்பு அளித்தார். அத்துடன் அவனுக்கு ஆயிரம் தீனார்களும் வெகுமதியாக கொடுக்கப்பட்டன.

துருக்கி மாஜி சுல்தான் அப்துல் ஹமீத் உடைய ஜீவிய சரித்திரத்தில் "ஒரு தடவை அவாது வேலைக்காரனொருவன் மிக்க சூடான குழம்பை, ஒரு கோப்பை நிறைய கைத்தவறி அவாது கையின்மேல் ஊற்றி விட்டதன் நிமித்தம் கையில் உள்ள அந்த விடம் கொப்பளித்து விட்டதாயும் சுல்தான் அவனுக்கு கடுமையான தண்டனை விதிக்க எண்ணினாராயினும், மனிதரால் தவறு ஏற்படுவது சகஜமே என்பதைக் கருதியும் மதபோதனைக் கிணங்க அவனை மன்னிக்க வேண்டும் என்பதை பாராட்டியும் ஒன்றும் செய்யாது விட்டுவிட்டார்.

காஜி அன்வர் பாஷா ஜீவிய சரித்திரத்தில் வந்துள்ள மற்றொரு நிகழ்ச்சியாவது:—

அவர் ஒரு நாள் கவாத்மைதானத்தில் வாலிப போர்வீரர்களுக்கு யுத்தப்பயிற்சி யளித்துக் கொண்டிருந்தபோது அங்கு இருந்துவந்த ஒருவன், காஜியை நோக்கி "அப்பா! நீ இன்னமும் அனுபவமற்ற சிறுவன். கவாத் பயிற்சி எவ்வாறு அளிப்பதென்பது உனக்கு என்ன தெரியும்? என்று பகிரங்கமாய் சப்தமிட்டுச் சொன்னான்.

அச்சமயம், காஜி அவர்களுக்கு உண்டான ஆத்திரம் இவ்வளவு அவ்வளவல்ல. அதே க்ஷணத்தில் அவனை வெட்டி விடலாமா என்றும் எண்ணினார்கள்.

ஆனால் வயோதிகத்தின் காரணமாய் அவன் தன் சுயபுத்தி இழந்து விட்டான் போலாயிருப்பதால் அவனை மன்னித்து விடுவதே

மேலாகுமென்று நினைத்து அவ்வயோதிகனைப் பார்த்து, ஐயா! தாங்கள் சொல்வது சரிதான். தாங்கள் வயது முதிர்ந்த பெரியார். நானோ சிறுவன். என்னால் ஏற்படும்படியான குறைகளுக்காக தாங்கள் எனக்கு போதித்தல் அவசியமேயாகும்'' என்று கூறினார்கள்.

மேற்சொல்லப்பட்ட சம்பவங்களினாலும் மதக்கட்டளை கட்டுப்பாடுகள் எவ்வளவு முக்கிக்கியமானவை என்ற விஷயம் நன்கு வெளியாகிறது.

அச்சுப் பணியாரம்.

பச்சரிசி மாவு இடித்தது ½ படி, முட்டை 10, சர்க்கரை 3 ஆழாக்கு, தேங்காய் 2, நெய் 5 பலம்.

இரண்டு தேங்காயைச் சீவி, தண்ணீரிடாமல் பால் எடுக்கவும். முட்டை 10யை ஒரு பாத்திரத்தில் உடைத்து ஊற்றி நன்றாக அடிக்கவும். அதில் சர்க்கரையை கொட்டி நன்றாக அடித்து கறைக்கவும். இதில் மேலே சொல்லிய தேங்காய் பாலை ஊற்றி அடிக்கவும். பின்பு இதில் பச்சரிசி மாவு ½ படியை போட்டு, நெய்யையும் ஊற்றி நன்றாக பிசையவும். (பருப்பு சட்டியில் போட்டு கடைந்தாலும் நலம்) பிறகு அதை தேவையான உருவத்தில் (அல்லது அச்சில் ஊற்றி) செய்து, ஒரு தட்டில் பாத்தவும். பிறகு அதை தந்தூர் அடுப்பில் வைக்கவும் அல்லது ஒரு பாத்திரத்தில் மணலை போட்டு அடுப்பிலேற்றி காய்ச்சவும். மணல் நல்ல சூடேறினவுடன் ஷ பணியாரமுள்ள தட்டை மணலின் பேரில் வைத்து, தட்டை மூடி, அம்மூடியின் பேரில் கொஞ்சம் நெருப்பு போடவும். சுமார் ½ மணி நேரத்தில் பணியாரம் வெந்து தின்பதற்கு தயாராகி விடும்.

விகடத் துண்டுகள்.

கடற்கரை மணலில் கணவனும் மனைவியும் உட்கார்ந்திருந்தார்கள், மனைவிக்காக காப்பி வாங்கிவர கணவன் சென்று வெகு நேரத்திற்குபின் அங்கு காப்பியுடன் வந்து,

"இந்த இடத்தை தேடிப் பிடிப்பதற்குள் ரொம்ப கஷ்ட்டமாகி விட்டது. இங்கே ஒரு உயரமான ஒரு பெண் உட்கார்ந்திருந்தாள். அவள் எழுந்துபோய் விட்டாள் போலும்."

முதல் ஆசாமி:—இந்த நேரத்தில் சந்திரன் இருக்கிறதே.

இரண்டாவது ஆசாமி:—அது சந்திரன் இல்லை சூரியன்.

அந்த நேரத்தில், மூன்றாவது ஆசாமி ஒருவர் அங்கு வந்தார். அவரிடம் இவர்கள் சந்தேகத்தைப் பற்றி கேட்டார்கள்.

மூன்றாவது ஆசாமி:—நான் இந்த இடத்திற்கு புதுசு எனக்கு தெரியாதுங்க.

முதல் ஐயர்:— (இரண்டாவது ஐயரிடம்) நான் நினைக்கிறேன் உங்களை எங்கேயோ சந்தித்திருக்கிறேன் என்று.

இரண்டாவது ஐயர்:—உங்கள் பெயர் எனக்கு ஞாபகத்திற்கு தற்போது வரவில்லை. ஆனால் உங்கள் நாமத்தைப் பார்த்தால் பார்த்தபடி இருக்கு.

பொன் மொழி.

ஒரு சாதாரண பெண்ணுக்கு அறிவைவிட அழகே தேவை, ஏனென்றால் ஒரு சாதாரண மனிதன் தான் பார்க்கிற அளவுக்கு யோசனை செய்ய முடியவில்லை.

செய்தி.

உலகத்திலேயே எழுதப்படும் கையெழுத்துக்களில் மோசமானது ஒரு டாக்டர் போஸ்ட் ஆபீஸ் பேனாவைக் கொண்டு எழுதிக் கொடுக்கும் மருந்து ரசீது தான்.

187024

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

மாஜிக் என்னும் ஜால வித்தை.

மாஜிக், அல்லது ஜாலவித்தை செய்ய விரும்புகிறவர்கள், இந்த புஸ்தகத்தை உபயோகப்படுத்தலாம். இதில் அடங்கியுள்ள வித்தைகள்.

கைகுட்டையை கிழியச் செய்வது, மறுபடியும் ஒன்றாக ஆக செய்வது, எரியச் செய்வது, சாம்பலை கைகுட்டையாக மறுபடியும் ஆக்குவது, வெறும் கையிலிருந்து கைகுட்டையை வரச் செய்வது, வெள்ளைக் குட்டைக்குப்பின் இரண்டு கைகுட்டைகளை வரச்செய்வது, எல்லா கைகுட்டைகளையும் மறையச்செய்வது, மறுபடியும் எல்லா கைகுட்டைகளையும் வரச்செய்வது, தனியாக ஒரு கைகுட்டையை கையிலிருந்து மறையச்செய்வது, கைகுட்டையின் நிறங்களை மாற்றுவது, கைகுட்டையை பில்லியர்டுபந்தாக மாற்றுவது, பில்லியர்டு பந்தை ஒரு கண்ணாடி தண்ணீர் டம்ளரில் மறையச்செய்வது, பந்தின் எண்ணிக்கைகளை அதிகப்படுத்துவது, பந்தின் நிறத்தை மாற்றுவது, சீட்டுக் கட்டிலிருந்து நினைத்த சீட்டை தானே மேலே எழும்பச் செய்வது, பூச்செண்டிலிருந்து நினைத்த சீட்டை எழும்ப செய்வது, நினைத்த சீட்டை புட்டிக்குமேலே தானே வரச்செய்வது, துப்பாக்கியால் நினைத்த சீட்டை கைகுட்டையில் ஒட்டச் செய்வது, மனதில் உள்ள சீட்டை வேறிடத்தில் வெளி வரச்செய்வது, சீசாவிலிருந்து நினைத்த கொடிகளை வரச்செய்வது, காகிதத்தில் உள்ள மோதிரங்களை சீசாவில் வரச்செய்வது, தொப்பியிலிருந்து முயலை வரச்செய்வது, தட்டில் போட்ட ரூபாய்கள் அதிகமாவது, வெறும் கூடையில் பூக்களை தருவிப்பது, கையிலுள்ள கைகுட்டை டம்ளரிலும், டம்ளரில் உள்ள முட்டை கையிலும் வரச்செய்வது, நினைத்தசீட்டை நினைத்த ஆரஞ்சு பழத்தில் வரச்செய்வது, கையிலுள்ள குருவியுடைய கூடுமாயமாய் மறைந்து விடுவது, மனதிலுள்ளதை அறிவது, மந்திரத்தினால் நால்வர் எழுதிய எண்களை கூட்டச்செய்தல், தொப்பியிலிருந்து நிறை எடைகள் நிறைய எடுப்பது, மந்திரக்கோலை அந்தரத்தில் நிறுத்துவது, தொப்பி, மேஜை, மந்திரக்கோல் இவைகளை கையில் தொட்டபடியே அந்தரத்தில் நிறுத்துவது, நாற்காலியில் உட்கார்ந்திருந்த நங்கை மறைந்து போவது, ஒருவனை சாக்கில்கட்டிப்போட்டு சீல்வைத்த பிறகு கட்டை அவிழ்க்காமல் சாக்கிலிருந்து வெளிவருதல், மனிதனுடைய தலையை அறுத்து ஒரு தட்டில் வைத்து சபையோர்க்கு காண்பித்த பிறகு மறுபடியும் தலையை வைத்து ஆளை உயிர்ப்பிக்கிறது, ஆளை உள்ளே வைத்து பூட்டின பெட்டியிலிருந்து க்ஷணநேரத்தில் வெளிவந்து மறுபடியும் க்ஷணநேரத்தில் ஆள் பெட்டிக்குள் கட்டிய பைக்குள் செல்வது ஆகிய இவைகளும் இன்னும்கறுப்புக் கலையைப் பற்றியும் மற்றும் சில வித்தைகளும் இதில் விபரித்துஇருக்கின்றன.

வித்தைகளை விபரிக்க படங்களும் அதிகமாக போடப்பட்டு இருக்கின்றன.

இதன் விலை ரூபா. 1—8—0

ஹாஜி எம். எ. ஷாஹூல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

அஹ்காமுல் முஸ்லிமீன்

(ஹனபி)

கலிமாக்கள், ஈமான், இஸ்லாம், உலூ, முழுக்கு, ஹைலு, நிபாஸூ, தண்ணீர், தயம்மம், நஜீஸூ, தொழுகைகளின் வக்துகள், தொழுகைகளின் வரிசைகள், தொழுகையை விட்டவனுடைய வேதனை, தொழுகையின் பறுலுகள், தொழுகிற ஒழுங்கு, ஜமாஅத்துடன் தொழுகிற வரிசைகள், வித்று தொழுகை, நபில் தொழுகை, தறுவீஹ் உடைய வரிசைகள், ஜூம்ஆ உடைய வரிசை, மையத்துடைய விஷயங்கள், ஸகாத்தின் பயான், நோன்புடைய வரிசைகள், ஹஜ்ஜூடைய வரிசைகள், நபி நாயகம் (ஸல்) அவர்களின் ரவுலாஷரீபை ஸியாரத்து செய்கிறது ஆகிய இந்த விஷயங்களைப் பற்றி பேசும் பாடங்கள் இதில் நிறைந்திருக்கின்றன.

இவைகள் அல்லாமல் இன்னும் எண்ணற்ற விஷயங்கள் இந்த புஸ்தகத்தின் தக்மிலா என்று சொல்லப்படும் பாகத்தில் கூறப்பட்டிருக்கின்றன. இதன் விலை ரூ. 1—0—0

ஷை அறபுத் தமிழ் கலிகோ பைண்டு ரூ. 1—8—0

ஷை தமிழ் ஷாபி மதுஹபுக் குரியது ரூ. 1—0—0

ஷை அறபுத் தமிழ் ஷாபி மதுஹபுக் குரியது கலிகோ பைண்டு ரூ. 1—8—0

இஹ்யா உலூமுத்தீன் மொழி பெயர்ப்பு.

புதிய பதிப்பு

ஹூஜ்ஜதுல் இஸ்லாம் ஹஸரத் இமாம் கஸ்ஸாலி றஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களால் இயற்றப்பட்ட மஹா அரிய பெரிய நூலாகிய இஹ்யா உலூமுத்தீன் என்னும் கிதாபின் மொழி பெயர்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருந்த கனவான்களுக்கு இது ஒரு சன்மானம். பெரிய அளவில் 392-பக்கங்கள் கொண்டது. கலிகோ பைண்டு விலை ரூபா. 5

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹூல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.